REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜுலை 21 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 170 | Thursday 21, July, 2022 | 16 பக்கங்கள் | 40/-




# ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க

## 134 வாக்குகளால் வெற்றிபெற்று நாட்டின் 08ஆவது ஜனாதிபதியாக தெரிவு

ரணில்-134, டளஸ்-82, அனுர-03
நிராகரிப்பு-04
கலந்துகொள்ளாதோர்-02
மொத்தம்-225



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் 08 ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில், 52 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று அவர் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக 134 வாக்குகள் அளிக்கப்பட்டதோடு டளஸ் அழகப்பெரும எம்.பிக்கு ஆதரவாக 82 வாக்குகளும் அனுர குமார திஸாநாயக்கவுக்கு 03 வாக்குகளும் கிடைத்தன.

223 எம்.பிக்கள் வாக்களித்திருந்த போதும், 04 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் அறிவித்தார். இருவர்

06



ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நேற்று (20) பாராளுமன்றத்தை விட்டு வெளியேறும் போது பாராளுமன்ற வளாகத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் முப்படையினரிடம் நேரில் சென்று உரையாடியதுடன் தனது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

### ரணில் விக்ரமசிங்க...

★ எஸ்மண்ட் விக்கிரமசிங்க மற்றும் நளினி விக்கிரமசிங்க தம்பதிகளுக்கு மகனாக 1949 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார்.

★கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டப் பட்டம் பெற்று சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து 1972ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராகப் பதவியேற்றார்.

★ 1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பியகம தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பிரதி வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

★1978 இல், முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அமைச்சரவையில் இளம் அமைச்சரவை அமைச்சராக, இளைஞர் விவகாரம் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராகப் பதவியேற்றார்.

06

## பிளவுபட்டது போதும் நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்

### அனைத்துக் கட்சிகளுக்கும் புதிய ஜனாதிபதி ரணில் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பிளவுபட்டது போதும், ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோமென புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து கட்சிகளுக்கும் நேற்று அழைப்பு விடுத்தார்.



புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளாரென பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இவர் இந்த அழைப்பை விடுத்தார்.

06

## நாட்டின் முன்னேற்றத்துக்கு புதிய அரசுக்கு நேசக்கரம்

### பாராளுமன்றில் டளஸ் அழகப்பெரும உரை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு நேசக்கரம் நீட்டுவதாக ஜனாதிபதி தெரிவில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசியல் மீது இழந்துள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பென்றும் அவர்

06

## பிரதமராக வடக்கு எம்.பி ஒருவரை நியமித்திருக்கலாம்

### சபையின் கௌரவம் அதிகரித்திருக்கும் அனுரகுமார திஸாநாயக்க




**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பிரதமர் பதவியை வடக்கு தமிழ் எம்.பி ஒருவருக்கு வழங்க முடியுமாக இருந்திருந்தால் வெளியில் இந்த சபை குறித்து கௌரவமான நிலை உருவாகியிருக்குமென தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று (20) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். புதிய ஜனாதிபதியாக

06

எமக்கு எவ்வித தொடர்புமில்லை

## ஜனாதிபதி தெரிவில் இந்தியா அழுத்தமா?



### இந்திய தூதரகம் மறுத்து அறிக்கை

இலங்கை ஜனாதிபதி தெரிவுக்காக இலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் மீது இந்தியா அரசியல் ரீதியான அழுத்தங்கள் வழங்குவதாக வெளிவந்துள்ள செய்திகளை இந்தியா மறுத்துள்ளது. இது தொடர்பாக இந்திய

06

## புதிய ஜனாதிபதியாக ரணில் இன்று பதவியேற்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இலங்கையின் 08 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, இன்று காலை சுபநேரத்தில் பாராளுமன்ற வளாகத்தில் புதிய ஜனாதிபதியாக சத்தியப்

06

## புதிய அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண

06

25ஆம் திகதி முதல் திங்கள், செவ்வாய், வியாழன்

## வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே பாடசாலை தினம்

புதன், வெள்ளி வீடுகளிலிருந்து கற்றல்

கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே பாடசாலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி முதல் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில்

06

## அம்பியூலன்ஸில் வந்து வாக்களித்த MPக்கள்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்காக டெங்கு நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த

06



காலிமுகத்திடலில் அமைந்துள்ள

## பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் செல்லத் தடை

### 50 மீற்றர் தூரத்துக்கு நுழைய முடியாது



காலிமுகத்திடல் பகுதியில் உள்ள பண்டாரநாயக்கவின் உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்றுவட்டத்திற்குள் போராட்டக்காரர்கள் நுழையக்கூடாது என கோட்டை நீதவான்

06

தினமும் 40 – 50 தொற்றாளர் பதிவு

## கொவிட் –19 தொற்று தீவிரமாக அதிகரிப்பு

### முகக்கவசத்தை கட்டாயமாக்கவும் – GMOA

இலங்கையில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொவிட்19 நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களில் 40 முதல் 50 ஆக அதிகரித்துள்ளது.

கொவிட்19 நோயாளர்களை அடையாளம் காண நாளாந்தம் சுமார் 1,000 பரிசோதனைகள் நடத்தப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

06

## ஜனாதிபதி ரணிலுக்கு இ.தொ.கா வாழ்த்து



நாட்டின் 08ஆவது ஜனாதிபதியாக பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது



06

FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.360/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G Smartphone அவசியமாகும்
TRC/D/PRO/20/10
Dialog
எதிர்காலம் இன்றே.

# யாழ். மாநகர 'காவல் படை' வழக்கு; முதல்வர் மணிவண்ணன் விடுவிப்பு

### காவல் படையின் சீருடைகளையும் மீள கையளிக்க உத்தரவு



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

யாழ். மாநகர சபையினால் உருவாக்கப்பட்ட 'காவல் படை' தொடர்பிலான வழக்கில் இருந்து, யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், காவல் படையின் சீருடைகளையும் மீள கையளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், யாழ். மாநகர சபையினரால் காவல் படை உருவாக்கப்பட்டது. யாழ். மாநகர சுகாதாரத்தை மேம்படுத்துதல், குப்பைகளை பொது இடங்களில் வீசுவோர், பொது இடங்களில் எச்சில் துப்புவோர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக தண்டம் விதித்தல், தேவைப்படின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவே காவல் படை உருவாக்கப்பட்டது.

குறித்த காவல் படையின் சீருடையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது என பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

காவல் படையை சேர்ந்தவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், தொடர்ந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபனிடமும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனை தொடர்ந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை அழைத்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், முதல்வரை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா அழைத்து சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள், முதல்வரை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து நீதிமன்றால் முதல்வர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று (20) தினம் புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது , வழக்கினை மேற்கொண்டு நடாத்தவில்லை என சட்ட மாஅதிபர் திணைக்களம் மன்றுக்கு அறிவித்தமையை அடுத்து யாழ். மாநகர முதல்வரை வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்ததுடன், சான்று பொருட்களாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சீருடைகளையும் மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை (Media and Information Literacy)

# மேம்படுத்தும் நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

**யாழ். விசேட நிருபர்**



ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை (*Media and Information Literacy*) மேம்படுத்தும் நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையமும் (*Center for Media and Information Literacy*) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கைச்சாத்திட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக் கழக சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், விழிப்புணர்வுடனான தகவல் நுகர்வையும் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவையும் மக்களிடையே ஊக்குவிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையத்தின் சார்பில் வைத்தியக் கலாநிதி எம். ஏ. வை. அரபாத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி. ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் திருமதி அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் சுயாதீன ஊடக மற்றும் தகவல் விளங்கறிவு ஆலோசகர் கலாநிதி எம். சி. ரஸ்மின் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அறுவடைக்கான எரிபொருள் வழங்கப்படவில்லை

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் கீழ் சிறுபோக பயிர்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கான அறுவடைக்கான எரிபொருள் வழங்கப்படாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

அறுவடை நடைபெற்று வரும் நிலையில் எரிபொருள் பெறமுடியாத நிலை ஏற்ப்பட்டுள்ளதாகவும் கல்மடு கமக்கார அமைப்புக்கள் மற்றும் தருமபுர கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அதிக விலைக்கே எரிபொருளை 1200 ரூபாவிற்கு பெறவேண்டியுள்ளதாகவும் அத்துடன் நெல்லினை களஞ்சியப்படுத்தும் உரபை பெருவதிலும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கல்மடு விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



எனவே உரிய நேரத்தில் எரிபொருள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.



யாழ்.கரவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக சுமார் 65,000 பெறுமதியான உலருணவுப் பொருட்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. இதற்கான நிதியை அமெரிக்காவை சேர்ந்த புலம்பெயர்ந்த ஒருவர் தனது மகனின் பிறந்தநாள் நினைவாக 65,000 ரூபாவை பூமணியம்மா அறக்கட்டளையூடாக இலங்கை கிளைக்கு அனுப்பிவைத்தார். இலங்கைக் கிளையின் தலைவர் யாழ். மாநகர சபை உறுப்பினருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் நேரில் சென்று கையளித்தார். (படம்: வேலணை குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# விவசாயிகளுக்கு யூரியா வழங்கல்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளுக்கான யூரியா உரம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற உரத்தினை விவசாயிகளுக்கு பங்கீட்டு நடவடிக்கையில் கமநலசேவை திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவின் குமுழமுனை, பாண்டியன்குளம், உடையார்கட்டு,ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையங்களில் விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கர் சிறுபோக விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 20 கிலோ யூரியா உரம் வழங்கப்பட்டு வருகின்றது ஒரு கிலோ யூரியா 200 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

# முல்லை மண்ணின் கலைஞர்களின் உருவாக்கத்தில் 02 குறும்படங்கள்




**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லை மண்ணின் கலைஞர்களின் உருவாக்கத்தில் இரண்டு குறும்படங்கள் வெளியிடப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களின் உருவாக்கத்தில் யோகம்மா கலைக்கூடம் பெருமையுடன் வழங்கும் அரிது அரிது மற்றும் பாரச்சிலுவை என்ற இரண்டு குறும்படங்கள் எதிர்வரும் 25.07.2022 அன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

கு.யோகேஸ்வரன் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவாக்கப்பட்ட இரண்டு குறும்படங்களும் சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளது.

இந்த இரண்டு குறும் படங்களும் முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களின் விடா முயற்சியினால் முழுமைபெற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் தலைமையில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

# கிளிநொச்சி கோரக்கன் கட்டு விவசாயிகளின் முறைப்பாடுகள்

### ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சி கோரக்கன் கட்டு விவசாயிகளால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாபதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் நூறு வீதமான நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொண்டுள்ளதுடன் இதுவரை இரணைமடுக்குளத்தின் கீழ் உட்படாத கோரக்கண் கட்டு பகுதி பரீட்சார்த்தமாக உள்வாங்கப்பட்டு இம்முறை சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக உள்வாங்கப்பட்ட கோரக்கன் கட்டு பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எந்த விவசாயிகளுக்கும் பயிர் செய்கைக்கான காணிகள் வழங்கப்படாது குறித்த பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், சகோதரர்கள் மாத்திரமே முற்று முழுதாக சிறுபோக செய்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் வாழ்வாதாரத்துக்காக எந்த விதமான பயிர் செய்கைகளையும் மேற்கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லையென்பதையும் மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கையொப்பமிட்ட மகஜர்களை பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

இதனையடுத்து மாவட்ட பயிர்ச் செய்கை குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் மகஜரை பொறுப்பேற்றுக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்,கிளிநொச்சி கோரக்கண் கட்டு விவசாயிகளால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து அது தொடர்பிலான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் தனியார் காணியில் வெடிபொருட்கள் மீட்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர் துப்பரவு பணியில் ஈடுபட்ட நிலையில் இவை அடையாளம் காணப்பட்டது. இந்த நிலையில் பொலிசாருக்கு காணி உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் இவை நேற்று முன்தினம் முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இதில் மோட்டார் செல்கள், மகசின்கள், கண்ணீர் புகைக்குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மன்னாரில் எரிபொருளை பெற்று கொள்வதற்காக QR அட்டை பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள்

**மன்னார் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் உள்ள வாகன உரிமையாளர்கள் அனைவரும் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக QR முறைமையில் பதிவு செய்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் அறிவுறுத்தியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருளை விநியோகிக்கும் QR குறியீட்டு முறை எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் மன்னார் மாவட்டத்தில் உள்ள வாகன உரிமையாளர்கள் அனைவரும் இந்த QR முறைமையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். அத்துடன் நடைமுறையில் உள்ள வாகன எரிபொருள் அட்டை முறைமையானது வரும் 24ஆம் திகதி வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

எனவே அதற்கு முன்பதாக QR குறியீட்டு அட்டை முறையை பதிவு செய்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மூலப் பொருட்களின் விலைகள் அடிக்கடி மாற்றமடைவதால் சபை நிதி வேலைத்திட்டங்கள் தாமதம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக மூலப் பொருட்களின் விலைகள் அடிக்கடி மாற்றமடைவதால் சபை நிதி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

நாட்டு நிலைமை காரணமாக ஒவ்வொரு மாவட்டத்தில் ஒவ்வொரு விலைவாசி நிலவுகிறது.எனவே மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பொறியியலாளர்களால் மூலப் பொருட்களின் விலைகளை அந்தந்த மாவட்ட மட்டங்களிலேயே கணித்து மதிப்பீட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தேக்க நிலையில் உள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சனசமூக நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் அரசாங்க திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் சபைநிதி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தடை போடப்படவில்லை. எனவே குறித்த வேலைத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி மக்களின் நலன் பேண நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 21 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

19 முதல் 23 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.43 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.47 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | சுகம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | கோபம் |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# சீருடையுடன் வந்து பெற்றோல் பெற்ற முன்னாள் OIC கைது

## 22ஆம் திகதிவரை விளக்கமறியல்

எரிபொருளை நிரப்புவதற்காக வந்த முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி மாலை அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் முன்னாள் பொலிஸ் அதிகாரியான அவர் வந்தபோது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை(19) கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (22) திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு பகுதியில் வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளை ஒன்றிலும் அவர் சந்தேக நபராக இனங்காணப்பட்டு பொலிஸ் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கல்முனை பாண்டிருப்பு பகுதியை சேர்ந்த 56 வயதான சந்தேக நபரான இவர் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் பொலிஸ் சீருடை தரித்து வந்து பல தடவை எரிபொருளை நிரப்பி சென்றதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கைதாகியுள்ளார். அவர் மீது, அரச ஊழியர் போன்று நடமாடி சட்டவிரோதமாக பொலிஸ் சீருடையை அணிந்து செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட போதிலும் எவ்வாறு சீருடைகளை பெற்று இவ்வாறு செயற்பட்டார் என்பது தொடர்பில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# புதிய ஜனாதிபதி ரணிலுக்கு இந்துமத பீடம் வாழ்த்து

## சிவஸ்ரீ பாபுசர்மா குருக்கள் ஆசி



புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் இலங்கையின் 8ஆவது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சர்வதேச இந்துமத பீடச்செயலாளர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார் .

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மக்கள் மன திருப்தியுடன் வாழக்கூடிய சூழ்நிலையை கையாளக்கூடிய தலைவர். இவரது தலைமையில் பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீண்டு நல்ல நிலைக்கு வருவதுடன் சர்வதேச ஆதரவுடன் இலங்கை நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு அவரிடம் சுமத்தப்பட்டுள்ளது. மக்களை உணர்ந்து மக்களின் மனதை அறிந்து செயற்பட்டு மக்களுக்கு மன நிம்மதியுடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அது இறைவன் அவருக்கு தந்த மிகப்பெரிய அங்கீகாரம் ஆகும் என சர்வதேச இந்துமத படத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களுடன் கூடிய ஆசி செய்தியினை தெரிவித்துள்ளார்.

# இந்திய வீசா வழங்கல் மையத்தின் பணிப்பாளர் தாக்கப்பட்டுள்ளார்

## விசாரணைகள் ஆரம்பம்

இந்திய வீசா மையத்தின் (IVS) பணிப்பாளராக பணிபுரியும் இந்தியர் விவேக் வர்மா, செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய உயர் ஸ்தானிகராலயம் இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கையில், கொழும்புக்கருகில் நேற்று முன்தினம் இரவு தாக்குதலில் படுகாயமடைந்த இந்திய விசா மையத்தின் பணிப்பாளரான இந்தியர் விவேக் வர்மாவை இந்திய தூதரக அதிகாரிகள் சந்தித்தனர். இலங்கையிலுள்ள அதிகாரிகளின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

தாக்கப்பட்டவர், வர்மா இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரியோ அல்லது இந்திய அரசாங்க அதிகாரியோ அல்ல, ஆனால் வீசா வேலைக்காக அமர்த்தப்பட்ட சேவை வழங்கும் தனியார் இந்திய வீசா மையத்தில் பணிபுரியும் நபர் என்று கூறினார்.

இந்தச் சம்பவம் இந்தியர் ஒருவர் எதற்காக தாக்கப்பட்டாரென்ற ஊகத்தை ஏற்படுத்தியது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை தாங்க முடியாமல் நாட்டை விட்டு தப்பிச் செல்ல இந்தியா உதவ முயற்சித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டைத் தொடர்ந்து இது நடந்ததாக சிலர் தெரிவித்தனர். எவ்வாறாயினும், வர்மா மீதான தாக்குதலுக்கான காரணங்கள் நடத்தப்படும் விசாரணையில் மட்டுமே தெரியவரும் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறியமைக்கும் இந்தியாவுக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று இந்தியா அதிகாரப்பூர்வமாக மறுத்துள்ளது.

# பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியம்

## சகல எம்பிக்களிடமும் சபாநாயகர் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்கால சவால்களை வெற்றிகொள்ள பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அவசியமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் புதிய ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு உள்ளிட்ட செயற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். ஜனநாயக ரீதியில் ஜனாதிபதி தெரிவுக்காக முன்வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் டளஸ் அழகப்பெரும, அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக சபாநாயகர் தெரிவித்தார்.

வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியான நிலையில் நாடு காணப்படுவதால் அனைவரது அர்ப்பணிப்பும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் நாட்டினதும் மக்களினதும் சுபீட்சமான எதிர்காலத்துக்காக பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி தெரிவுக்கான வாக்களிப்பையடுத்து அனைவருக்கும் நன்றி கூறி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# நாட்டை சரியான திசையில் வழிநடத்தி செல்லக் கூடியவர் ஜனாதிபதி ரணில்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து

**யாழ்.விசேட நிருபர்**



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயரிய ஜனநாயக முறைமையின் பிரகாரம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று புதிய வரலாற்றை படைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைவதாக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"இலங்கை, அரசியல் நெருக்கடிகளையும்,பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு தலைமை தாங்கி நாட்டை சரியான திசையில் வழிநடத்திச் செல்லக் கூடியவர், ரணில் விக்கிரமசிங்கதான் என்பதை நாம் நேர்மையாகவும், துணிச்சலோடும் அன்று கூறியிருந்தோம்.

தற்போது நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய கடமைப் பொறுப்பை செய்வதற்கு நாம் அனைவரும் கட்சி அரசியலுக்கு அப்பால் ஒருமித்து செயலாற்ற வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

இவ்வாறான அரசியல் சூழலில் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை அர்த்தமுள்ள வகையிலும் தமிழ் மக்களின் கௌரவமான எதிர்காலத்தையும் ஆழமாக ஆராய்ந்து, பொருத்தமான தீர்மானங்களை எடுக்கவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்களாக இருப்பவர்கள் தமது தவறான தீர்மானங்களால் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களில் அரசியல் பலத்தை வீணடித்துள்ளார்கள்.

ஆனாலும் நாம் எப்போதும் தீர்க்கதரிசனமான தீர்மானங்களையே எடுத்திருக்கின்றோம். எமது தேசிய நல்லிணக்க அரசியல் முன்னெடுப்புக்களானது தமிழ் மக்களின் சமத்துவமான எதிர்காலத்தை வென்றெடுப்பதற்கும், தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அனைத்துவகை பிரச்சினைகளுக்கும் தீர்வு களைப்

06

# யாழ்.கசூரினா கடற்கரையில் 575 Kg கேரள கஞ்சா மீட்பு

## 02 சந்தேக நபர்களுடன் கண்ணாடி இழை படகும் மீட்பு



யாழ்ப்பாணம், காரைநகர் பழைய கசூரினா கடற்கரையில் 19 ம் திகதி இரவு இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 575 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் கண்ணாடி இழை படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

படகில் பயணித்த 02 சந்தேகநபர்களையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடல் வழியாக போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களை எதிர்த்து இலங்கை கடற்படை ரோந்து மற்றும் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, கடந்த 19ம் திகதி இரவு, வடக்கு கடற்படைக் கப்பல்களான எலாராவுடன் இணைக்கப்பட்ட கரையோர ரோந்துக் கப்பல்கள் P157, P013 மற்றும் P018 யாழ்ப்பாணம், காரைநகர் பழைய கசூரினா கடற்கரைக்கு அப்பாலுள்ள கடல் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. அங்கு சந்தேகத்திற்கிடமான படகொன்றின் கண்காணிப்பு மற்றும் சோதனையின் போது, 17 பொதிகளில் அடைக்கப்பட்ட 575 கிலோ கேரள கஞ்சாவுடன் கண்ணாடி இழை படகு மற்றும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், மாதகல் பகுதியைச் சேர்ந்த 42 மற்றும் 51 வயதுடையவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# 65 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு எச்சரிக்கை

நாடு முழுவதிலும் 65 சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பிரிவுகளை அதிக ஆபத்துள்ள டெங்கு அபாய பிரிவுகளாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர அறிவித்துள்ளார்.



இதில் கொழும்பு மாவட்டத்தில் 17 MOH பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் 13 பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் 6 பிரிவுகளும் , கண்டி மாவட்டத்தில் 6 பிரிவுகளும், காலி மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும், மாத்தறை மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து ஒரு பிரிவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிரிவும், புத்தளம் மாவட்டத்தில் 3 பிரிவுகளும் , குருநாகல் மாவட்டத்தில் ஒரு பிரிவும், இரத்தினபுரி மாவட்டத்தில் 6 பிரிவுகளும் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 05 பிரிவுகளும் டெங்கு பரவும் அபாய பிரதேசமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஜூலை 1 தொடக்கம் இன்று வரையில் 6 ஆயிரத்து 697 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டொக்டர் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வருட ஆரம்பம் முதல் நாடு முழுவதிலும் இருந்து 42 ஆயிரத்து 121 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 52.6 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# புதிய ஜனநாயக மக்கள் முன்னணி ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை விரைவாக வழமைக்குக் கொண்டு வருவார் என மக்கள் முழுமையாக நம்ப வேண்டும் என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெவித்துள்ளதாவது,

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவாக தீர்வு காணுவார். இவர் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பார், அத்துடன், மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை நெருக்கடி இன்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பார். புதிய ஜனாதிபதி வாழ்க்கைச் செலவை குறைக்கவும் விரைவாக நடவடிக்கையெடுப்பார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்ய பாராளுமன்றத்தில் வாக்களித்த அனைத்து எம்.பிக்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன். நாட்டின் எதிர்காலம் மற்றும் தொலைநோக்கு கொள்கை கொண்டுள்ள

06

# பரத நாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளும் திரு. திருமதி பிரபாகரன் மற்றும் திரு. திருமதி அரவிந்த் தம்பதிகளின் புதல்விகளுமான செல்வி நம்ருதா பிரபாகரன், ஹம்ஷிதா பிரபாகரன் மற்றும் ஹர்ஷினிஅரவிந்த் ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நெறியாள்கையில், அணிசேர் கலைஞர்களாக, குரலிசை ஸ்ரீ. ஆரூரன், மிருதங்கம் ஸ்ரீ. லோகேந்திரன் , வயலின் ஸ்ரீ. திபாகரன், தாள தரங்கம் ஸ்ரீ. ரட்ணதுரை மற்றும் புல்லாங்குழல் ஸ்ரீ. பிரியந்த ஆகியோரின் பங்களிப்புடன் அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. இவ் அரங்கேற்ற நிகழ்வுக்கு டாக்டர். ஜெயந்தி யோகராஜா (ஸ்தாபக இயக்குனர் சலங்கை நர்த்தனாலய கலைக்கூடம் லண்டன்) பிரதம விருந்தினராகவும், கொழும்பு இன்டர்நேஷனல் கல்லூரியின் அதிபர் சாரா பிலிப்ஸ் மற்றும் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அதிபர் ஏ.எம் ரஞ்சனி சில்வா கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.76 | 257.09 |
| கனடியன் டொலர் | 276.47 | 288.75 |
| யூரோ | 364.85 | 379.31 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 255.88 | 266.36 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 358.53 | 368.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.90 | கட்டார் ரியால் | 98.40 |
| குவைத் டினார் | 1,177.04 | சவூதி ரியால் | 96.37 |
| ஓமான் ரியால் | 939.90 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.51 |

தினகரன்
THINAKARAN තිනකරන්

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

காலந்தாழ்த்தி செய்யத் தக்கவற்றைக் காலம் தாழ்ந்தே செய்ய வேண்டும், காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்ய காலம் தாழ்த்தக் கூடாது.

## ரணில் ஜனாதிபதியாக தெரிவாகியதால் நெருக்கடிகள் நீங்குமென்ற நம்பிக்கை

சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழியாத்தடம் பதித்து விட்டது 2022 ஜுலை 20 ஆம் திகதி. அதுதான் பதில் ஜனாதிபதியும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தின் ஊடாக இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருப்பதாகும்.

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில், 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பெற்று ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை ஜுலை14 ஆம் திகதி இராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்நாட்டின் பதில் ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைப் பாராளுமன்றத்தின் ஊடாகத் தெரிவு செய்வதற்கான வேட்புமனு நேற்றுமுன்தினம் கோரப்பட்டது. அதற்கேற்ப பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் டளஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இவர்களில் ரணில் விக்கிரமசிங்க 1977 இல் பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்தவராவார். டளஸ் அழகப்பெரும 1990 களிலும், பின்னர் அநுர திஸாநாயக்கா 2000 களிலும் அரசியலுக்கு வந்தவர்கள் என்பது தெரிந்ததே.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேற்று (20 ஆம் திகதி) நடைபெற்ற வாக்கெடுப்பில் பதில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளையும், டளஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் அநுர திஸாநாயக்க 03 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். இதன்படி 52 மேலதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இந்நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் இன்று (21 ஆம் திகதி) நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்கிறார்.

1949 ஆண்டில் பிறந்த இவர், ரோயல் கல்லூரியின் பழைய மாணவராகவும் கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரியாகவும் விளங்குகிறார். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக 1970 களில் களனி தொகுதியில் அரசியலில் பிரவேசித்தார். 1977 பொதுத்தேர்தல் ஊடாக பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்த இவர், இளைஞர் விவகாரம், கல்வி, கைத்தொழில், நிதி உள்ளிட்ட பல அமைச்சுப் பதவிகளை மாத்திரமல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வகித்துள்ளார். அத்தோடு பிரதமர் பதவியை இந்நாட்டில் ஆறாவது தடவையாகவும் தற்போது வகித்துள்ளார்.

73 வயது நிரம்பிய இவர் நான்கரை தசாப்தங்கள் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். அவர் பரந்த அனுபவத்தையும் பெற்றுக் கொண்டுள்ளவராக விளங்குகிறார்.

இந்நிலையில் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பிரதமர் பதவியை கடந்த மே 09 ஆம் திகதி இராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து அன்றைய ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்ட இவர், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். குறிப்பாக நாடு ஏற்கனவே எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து வைத்ததன் மூலம் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் தற்போதைய நெருக்கடியையும் தணித்து தீர்ப்பதில் அவர் கவனம் செலுத்தியுள்ளார். அவரது நடவடிக்கைகளுக்கு சாதகமான பதில்களும் கிடைக்கப்பெற ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறான சூழலில் இந்நாட்டின் ஜனாதிபதியாக இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதன் மூலம் மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கிலும் மக்கள் பட்டாசு கொளுத்தி இவரது வெற்றியின் நிமித்தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய சூழலில் பாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட்டு நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்காக கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பும் விடுத்தார். அதுவே உடனடித் தேவையாகும். அதனையே புதிய ஜனாதிபதியின் அழைப்பும் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கவல்ல நம்பிக்கை மிகுந்த ஒரேயொரு தலைவர்





இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டியுள்ளார்.

நாட்டின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இன்று பதவியேற்கின்றார். புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவம் பாராளுமன்றத்தில் இன்று நடைபெறுகின்றது.

ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. இலங்கைப் பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களான 225 பேரில் 223 உறுப்பினர்கள் நேற்று வாக்களித்தனர். 2 உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை. 4 வாக்குகள் செல்லாதவை என அடையாளம் காணப்பட்டன.

நேற்றைய வாக்கெடுப்பில், 134 எம்பிக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து உள்ளனர். இதன்படி, இலங்கையின் 8 ஆவது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். இந்தத் தெரிவையடுத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலமான 2024 நவம்பர் மாதம் வரை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியில் இருப்பார்.

## இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக வெற்றிவாகை சூடிய ரணில் விக்கிரமசிங்க

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து போட்டியிட்ட டலஸ் அழகபெரும 82 வாக்குகள் பெற்று படுதோல்வி அடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாடாளுமன்றத்தில் தொடங்கிய வாக்குப்பதிவில் 223 வாக்குகள் பதிவாகின. 4 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்ட நிலையில், 2 எம்.பிக்கள் வாக்களிக்க வரவில்லை. இதையடுத்து 219 வாக்குகள் எண்ணப்பட்டன. இவற்றில் 134 வாக்குள் பெற்று ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


டலஸ் அழகப்பெருமவுக்கு 82 வாக்குகளும், அனுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி, பிரதமராக நியமிக்கப்பட்டு, பதில் ஜனாதிபதியாக பதவியேற்று தற்போது ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று பாராளுமன்ற வாக்கெடுப்பு ஆரம்பமாகும் வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன மாத்திரமே வெளிப்படையாக ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளிப்பதெனக் கூறியிருந்தன. ஆனால் டலஸ் அழகப்பெருமவுக்கே ஆதரவு என பல கட்சிகளில் இருந்து அறிவிப்பு வெளியாகி இருந்தது.

இந்நிலையில் இறுதி நேர முடிவுகள் தலைகீழாக மாறி அதிக வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் இன்று நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கக் கூடிய திறமை வாய்ந்த ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதாலேயே அதிக எம்.பிக்கள் அவருக்கு வாக்களித்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச ரீதியில் ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள செல்வாக்கு மற்றும் அவருக்குள்ள அரசியல் அனுபவம், ஆற்றல், கல்வித்தகைமை ஆகியன அவர் மீது அதிக எம்.பிக்கள் நம்பிக்கை வைக்கக் காரணமென்று அரசியல்வாதிகள் பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.



## பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 134 பெரும்பான்மை எம்.பிக்கள் ஆதரவு

புதிய ஜனாதிபதியாக அவர் பதவியேற்றிருப்பதால் எதிர்வரும் நாட்களில் பொருளாதாரச் சுமையில் இருந்து மக்கள் விடுபடக் கூடிய படிப்படியான முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியுமென பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டை பொருளாதார சிக்கலில் இருந்து மீட்டெடுக்கும் விடயத்தில் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் முன்பாக மிகப்பெரும் சவால்கள் உள்ளன என வெளிநாட்டு செய்திச் சேவையொன்று தெரிவித்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சில உறுப்பினர்கள் என பலரும் டளஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவை வழங்கியிருந்தாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகளவான எம்.பிக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.

## அரசியல், ஆற்றல், கல்விப்புலமை கொண்ட புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ், நாடு நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீண்டெழுமென அரசியல், பொருளாதார நிபுணர்கள் நம்பிக்கை

### வரலாற்றில் முதல் தடவை:

1978 முதல் இலங்கையின் வரலாற்றில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு பாராளுமன்றம் வாக்களித்ததில்லை. முதன்முறையாக பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றுள்ளார். 1982, 1988, 1994, 1999, 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற அதிபர் தேர்தல்களில் மக்களினால் அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1993 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட போது மட்டுமே, ஜனாதிபதி பதவி வெற்றிடமாக இருந்தது. அப்போது, பிரேமதாசவின் பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்காக டி.பி. விஜேதுங்க பாராளுமன்றத்தால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டார்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்பு அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராகவும் பல்வேறு அரசியல் வியூகங்களை பூகோள அரசியலுக்கேற்ப மாற்றியமைக்கும் திறன் படைத்தவராகவும், அரசியல் தத்துவாசிரியராகவும், அரசியல் ஆலோசகராகவும் ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றதையடுத்து சர்வதேச நாடுகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றன. ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவை பல்வேறு கட்சித் தலைவர்களும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அரசியலில் மாத்திரமன்றி கல்வித் தகைமையிலும் பெரும் சாதனைகள் படைத்தவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

க.பொ.த (உ/த) பரீட்சையில் இலங்கையில் 02ம் இடத்தில் சித்தியடைந்தவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். க.பொ.த (சா/த) பரீட்சையில் இலங்கையில் 07வது இடத்தில் சித்தி பெற்றார்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் கற்கும் காலத்தில் விவாதக் குழு மற்றும் நாடகக் குழுவின் தலைவராக இருந்தார்.

இலங்கை சட்டக் கல்லூரியின் முதலாவது பரிஸ்டர் பட்டம் பெற்றவர். லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பான முதுகலைப் பட்டம் வென்றவர்.

15 வயதில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய உலகின் ஒரே மனிதர் என்ற பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கையின் வயது குறைந்த முதலாவது அமைச்சர் அவராவார். உலகின் கல்வியறிவுள்ள அமைச்சர்களுக்காக வழங்கப்படும் 'பிலென் டி ஓர்' விருதை இரண்டு தடவைகள் பெற்ற ஒரேயொரு இலங்கை அரசியல்வாதி ரணில் ஆவார்.

இலங்கைக்கு இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியவர். இலங்கைக்கு கையடக்கத் தொலைபேசியை அறிமுகப்படுத்தியவர். இளைஞர் சேவைகள் மன்றத்தை ஆரம்பித்தவர். அறநெறிக் கல்விக்கு வித்திட்டவர். கல்வியற் கல்லூரிகளை ஆரம்பித்தவர். (college of education)

இலங்கையில் அதிக தடவைகள் பிரதமராக இருந்தவர். போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் நியமனம் வழங்கலை ஆரம்பித்தவர்.

ஒரே தடவையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10,000 ரூபாவால் அதிகரித்தவர்.

இவ்வாறாக பல்வேறு சாதனைகளுடன் கடந்த ஒரு வருடமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக தனியொரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் நெருக்கடியான நிலையில் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

எஸ்.சாரங்கன்...

# நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பை நாடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

**இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக 52 அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அவர் விசேட உரை யொன்றை ஆற்றியுள்ளார்.**

"எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது என்னுடைய கடமை" எனத் தெரிவித்த புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார ரீதியாக இந்த நாடு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.





டலஸ் அழகப்பெரும, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, அநுரகுமார திசாநாயக்க, சஜித் பிரேமதாச மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியோரையும் ஒன்றிணைந்து செயற்பட ஒத்துழைக்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் இவர்களுடன் சந்திப்பொன்று நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற வளாகத்தில் இன்று பதவியேற்கின்றார். அதற்காக அனுமதிக்குமாறு சபாநாயகரிடம் அவர் நேற்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையின் இன்றைய நிலைவரத்தைப் புரிந்து கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முன்வர வேண்டும் என்று புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் "நாடு இன்றுள்ள நிலைமை தொடர்பாக நாம் அனைவரும் நன்றாக அறிவோம். என்னுடன் இணைந்து போட்டியிட்ட டளஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இணைந்து பணியாற்ற வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன். அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கிறேன். நாம் பிரிந்து செயற்பட்ட காலம் இத்தோடு முடிவுற்று விட்டது. நாம் இனிமேல் ஒன்றாகப் பயணிக்க வேண்டும்.

அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளோம்" என்று குறிப்பிட்டார். மக்கள் கோருகின்ற 'அமைப்பு மாற்றத்தை' ஏற்படுத்த இணைந்து செயல்பட வேண்டும் என புதிய ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றை வெற்றியின்படி இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக இதுவரை பதவி வகித்தவர்களில் எட்டாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

1. ஜே.ஆர். ஜயவர்தன, 2. ரணசிங்க பிரேமதாச, 3. டி.பி. விஜேதுங்க, 4. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, 5. மஹிந்த ராஜபக்ஷ, 6. மைத்திரிபால சிறிசேன, 7.கோட்டாபய ராஜபக்ஷ, 8. ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இவ்வரிசையில் இடம்பெறுகின்றனர்.

## பிரிந்து பயணம் செய்யாமல், ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு அறைகூவல்

இலங்கை அரசியல் வரலாற்றில் 1993 இல் அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாச குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதையடுத்து ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு பாராளுமன்றம் வசமானது. பதில் ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜேதுங்க ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது இதுவே முதன்முறை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் தெரிவான ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து 42 வருடங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதிகளவு தடவை பிரதமராக பதவி வகித்துள்ளதுடன், அமைச்சுப் பதவி, சபை முதல்வர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் பதவி உள்ளிட்ட பல பதவிகளை வகித்துள்ளார்.

73 வயதான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக 09 ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

1949 மார்ச் 24 ஆம் திகதி பிறந்த அவர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்தார்.

1970 ஆம் ஆண்டு களனி தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர்,

## இலங்கை வரலாற்றில் கல்வித்துறையில் அதிகளவான மறுமலர்ச்சித் திட்டங்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் ரணில் விக்கிரமசிங்க

பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். 1977 ஆம் ஆண்டில் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன், இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக அப்போது கடமையாற்றினார்.

28 வயதில் வெளிவிவகார பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற அமைச்சு பதவிகளை வகித்தார்.

1989 மார்ச் 06 முதல் 1993 மே 07 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற சபை முதல்வராக பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க, 1994 முதல் 2001 வரை மற்றும் 2004 முதல் 2015 வரை இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்துள்ளார்.

அவர் முதன்முறையாக 1993 மே மதம் 07 ஆம் திகதி பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன், 1994 ஓகஸ்ட் 19 வரை அந்தப் பதவியை வகித்தார். அவர் இலங்கையில் அதிக தடவை பிரதமராக பணியாற்றிய (6 தடவை) பிரதமராகவும் வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இரண்டாவது முறையாக 2001 டிசம்பர் 09 ஆம் திகதி முதல் 2004 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையும், மூன்றாவது முறையாக 2015 ஜனவரி 09 முதல் 2015 ஓகஸ்ட் 17 வரையும், நான்காவது முறையாக 2015 ஓகஸ்ட் 17 முதல் 2018 ஒக்டோபர் 26 வரையும், ஐந்தாவது முறையாக 2018 டிசம்பர் 16 முதல் 2019 நவம்பர் 21 வரையும் ஏற்கனவே பிரதமராக பதவி வகித்துள்ளார்.



கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரணில் விக்கிரமசிங்க, பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன், இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்று இந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்ட ஒரே ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் 1980 முதல் 88 வரை கல்வி அமைச்சராக தொலைதூர ஆங்கில ஆசிரியர் பயிற்சி எனப்படும் டெலின் ஆசிரியர் பயிற்சி, பூரண கால தொலைதூர சேவை ஆசிரியர் பயிற்சி, பாடசாலைகளுக்கான பகலுணவு, மீப்பே அழகியல் நிறுவனத்தை ஆரம்பித்தல், முறைசாரா கல்வியை விரிவாக்குதல், ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக மாவட்ட ஆசிரியர் சேவையை ஆரம்பித்தல், ஆசிரியர் சேவையை 60 வயது வரை நீடித்தல், பிக்குகளுக்கான ஆசிரியர் பயிற்சி, பாடசாலை அபிவிருத்தி சங்கங்களை ஆரம்பித்தல், பாடசாலை மேற்பார்வை அலகுகளை உருவாக்குதல் போன்ற திட்டங்களை உருவாக்கியவர்.

பாடசாலை திட்டமிடல் அலகு, இலவச பாடப்புத்தக விநியோகம், வலயக்கல்வி அலுவலகங்களை நிறுவுதல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் மாணவர் ஆலோசனை சேவையை ஆரம்பித்தல் என்பன அவரது கல்வி மறுமலர்ச்சிகளாக குறிப்பிட முடியும்.

அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு கல்விக் கல்லூரி முறைமையை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க, 1988 இல் 09 தேசிய கல்விக் கல்லூரிகளை ஆரம்பித்தும் மற்றும் கல்வி ஆய்வுக்காக தேசிய கல்வி நிறுவகத்தை நிறுவியும் கல்வி அமைச்சராக கல்வியில் புதிய மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்.

ஆழ்ந்த இலக்கிய ஆர்வம் கொண்ட ரணில் விக்கிரமசிங்க வரலாறு, தொல்பொருள், சட்டம், பொருளியல், பௌத்தம் மற்றும் இலக்கியம், உலகளாவிய இலக்கியம் மற்றும் சுயசரிதையில் என்பன தொடர்பில் ஆழ்ந்த அறிவு கொண்டவராவார்.

பல்வேறு மதங்கள் மற்றும் தத்துவங்கள் தொடர்பில் அதிக ஆர்வம் கொண்ட அவர் திரிபிடகம், தம்மபத, பௌத்த இலக்கியம் மற்றும் அரசியல் கோட்பாடு தொடர்பில் 'அரசியல் மற்றும் தர்மம்' எனும் புத்தகத்தை எழுதியுள்ளார்.

அவரது பாரியார் களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கில கல்வி பிரிவின் சிரேஷ்ட பேராசிரியையான மைத்ரி விக்ரமசிங்க ஆவர்.

# இந்தியாவைப் போன்று வேறு எந்தவொரு நாடும் இலங்கைக்கு உதவி புரியவில்லை

**இலங்கையின் தற்போதைய நிலைமை இந்தியாவை கவலை அடைய செய்கின்றது. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, இந்தியா போன்று வேறு எந்த நாடும் உதவவில்லை' என்று வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் அளித்த பேட்டியில் அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அண்டை நாட்டில் ஸ்திரத்தன்மை இல்லாமல் இருப்பது ஆழ்ந்த கவலையளிக்கும் விஷயம். இலங்கையுடன் மீனவர் பிரச்சினை உட்பட நீண்டகாலப் பிரச்சினைகள் உள்ளன. கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஏராளமான கடன் உதவிகளை வழங்கி வருகிறது" என்றும் வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் வரலாறு காணாத கடும் பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு வாழ்வாதாரம் இன்றி, 100 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பாக இலங்கை நிலைவரம் குறித்து அனைத்துக் கட்சி கூட்டம் நடத்த வேண்டுமென்று தி.மு.க, அ.தி.மு.க கட்சிகள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருந்தன.

இதைத் தொடர் ந்து, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி தலைமையில்



## 'இலங்கையின் தற்போதைய நிலைமை இந்தியாவுக்கு கவலை அளிக்கின்றது' என்கிறார் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர்

அனைத்துக் கட்சி கூட்டம் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க எம்.பி. டி.ஆர். பாலு, எம்.எம். அப்துல்லா, முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், மாணிக்கம் தாகூர், வைகோ, மு.தம்பித்துரை மற்றும் திரிணாமுல் காங்கிரஸ், தேசிய மாநாடு, ஆம் ஆத்மி, தெலங்கானா ராஷ்டிரிய சமிதி, பகுஜன் சமாஜ், வை. எஸ்.ஆர். காங்கிரஸ், அ.தி.மு.க கட்சி எம்.பிக்கள் மற்றும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், எம்.பி.க்கள் பங்கேற்றனர். நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் உட்பட 8 மத்திய அமைச்சர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்ததாவது:

"இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத கடும் பொருளாதார நெருக்கடி சூழல் குறித்து விவாதிக்கவே இந்த அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்படுகிறது. நமது அண்டை நாடு என்பதால் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவுகள் இயற்கையாகவே இந்தியாவைப் பாதிக்கும். இலங்கையின் மோசமான நிலைவரம் இந்தியாவை கவலையடையச் செய்துள்ளது. இதே போன்ற நிலை இந்தியாவில் ஏற்படுமா? என்று சிலர் தவறான ஒப்பீடுகள் அடிப்படையில் கேள்வி எழுப்புகின்றனர்" என்று கூறினார்.

## இலங்கையின் இன்றைய நிலைமை தொடர்பாக இந்திய அனைத்துக் கட்சிகள் கூடி ஆராய்வு



இந்தக் கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது:

"இன்றைய கூட்டத்தில் இலங்கைக்கு உதவும் நடவடிக்கைகள் குறித்து அரசியல் மற்றும் வெளியுறவு கொள்கை கண்ணோட்டத்தில் நாங்கள் விளக்கம் அளித்தோம். இலங்கையின் தற்போதைய அரசியல் கொந்தளிப்பு, பொருளாதார நெருக்கடி, கடன் நிலைமை குறித்து விளக்கப்பட்டது.

நமது அண்டை நாட்டில் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டதால், அது எங்களுக்கு ஆழ்ந்த கவலை அளிக்கும் விஷயமாகும். மீனவர் பிரச்சினை உட்பட இலங்கையுடன் நீண்ட காலப் பிரச்சினைகள் உள்ளன. இந்த ஆண்டு இலங்கைக்கு இந்தியா வழங்கிய நிதி உதவி போல் வேறு எந்த நாடும் இந்த அளவு ஆதரவை வழங்கவில்லை.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலர், இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இந்தியா ஒரு பாடம் போல எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினர். இதையடுத்து மாநில வாரியாக, வருவாய் ஒப்பீடு, வளர்ச்சி வீதம், கடன்கள், சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவை குறித்த மத்திய நிதி அமைச்சகம் ஒரு விளக்கத்தை வெளியிடுமாறும் கேட்டுக் கொண்டோம்."

இவ்வாறு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது...

## பண்டாரநாயக்க சிலைக்கு...

நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த தடையுத்தரவு நேற்று (20) விதிக்கப்பட்டது.சிலைக்கு சேதம் விளைவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## புதிய ஜனநாயக மக்கள்... *(03ஆம் பக்கத் தொடர்)*

*ஒரு சரியான ஜனாதிபதி பல தசாப்தங்களின் பின்னர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.*

*இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வே. அவரது அரசியல் அனுபவம் மற்றும் பொருளாதாரத்தை கையாளும் அனுபவங்களின் ஊடாக மாத்திரமே நாட்டை வழமைக்குக் கொண்டுவர முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.*

## புதிய அரசாங்கத்துக்கு பூரண...

ஒத்துழைப்பை வழங்க தாம் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற எம்.பிக்களின் வாக்கெடுப்பில் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு எங்களின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

2019 இல் 69 இலட்சம் மக்களின் வாக்குகளுடன் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். 2020இல் 148 இற்கும் அதிகமான எம்.பிக்களை பெற்று அரசாங்கத்தை அமைத்து 20 ஆவது திருத்தத்தையும் செயற்படுத்தினர்.

ஜனாதிபதியொருவர் மக்கள் வாக்குகளின் மூலமே தெரிவு செய்யப்பட வேண்டும். இந்த நாட்டின் ஜனநாயக வரலாற்றில் மக்களின் எதிர்ப்பினால் ஜனாதிபதி ஒருவருக்கு பதவி விலக நேரிட்டது என்பதனை 225 எம்.பிக்களும் புரிந்துகொண்டால் சிறந்தது.

நாட்டில் காட்டுச் சட்டம் இருக்க முடியாது. ஜனாதிபதி தெரிவுக்காக நானும் போட்டியிட தீர்மானித்திருந்தேன். பல்வேறு விடயங்களை ஆராய்ந்த பின்னர் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக நாம் ஒரு அடி பின்வாங்கினோம்.

நாட்டில் எரிபொருள், மருந்து இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. உணவுப் பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

நாட்டை கட்டியெழுப்பும் தேசிய திட்டத்தை நாங்கள் தயாரிக்க வேண்டும். அதனை இலக்கு நோக்கி எமது பயணத்தை முன்னெடுக்க வேண்டும். அரசியல் மறுசீரமைப்புகள் இடம்பெற வேண்டும். நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும். மக்களை வாழ வைப்பதற்காகவும் முடிந்தளவான ஆதரவை வழங்குவோம்.

இதில் அரசியல் டீல் கிடையாது. நாங்கள் நாட்டுக்காக வழங்க வேண்டிய ஒத்துழைப்பை வழங்குவோம். இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் நாங்கள் எடுத்த தீர்மானம் தொடர்பில் கவலைப்படவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். (பா)

## கொவிட் -19 தொற்று தீவிரமாக...

உறுதிப்படுத்தியுள்ளது.

அண்மைய நாட்களில் கண்டறியப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ள அதேவேளை, சில நாட்களுக்கு ஒருமுறை நாட்டில் கொவிட் 19 தொடர்பான மரணங்களை அதிகாரிகள் உறுதிப்படுத்துவதாக சங்கத்தின் செயலாளரான வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். நோய்த்தொற்றுகளின் அதிகரிப்புடன், சுகாதார அமைச்சு கொவிட் 19 தொடர்பான தொழில்நுட்பக் குழுவைச் செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார சூழலில் கொவிட்19 தொற்று ஏற்பட்டால், அது பாரிய சிக்கல்களை தோற்றுவிக்கும். தற்போது பல நாடுகளில் ஒரு புதிய கொவிட் பிறழ்வு வேகமாக பரவி வருவதை இலங்கை புறக்கணிக்க முடியாது.தற்போதைய சூழலில் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுப்பது இன்றியமையாதது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, இலங்கை நிதி மற்றும் பிற பிரச்சினை களை கையாள்வதாகவும், எனவே அதிகாரிகள் உரிய தீர்மானங்களுக்கு வரும்போது மக்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையான தடுப்பூசி அளவுகள் ஏற்கனவே நாட்டில் உள்ளன. எனவே தகுதியுடைய சகல பெரியவர்களும் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியம்.

இன்னும் சில வாரங்களில் அந்த தடுப்பூசி அளவுகள் காலாவதியாகிவிடும் என்பதால் விரைந்து அதனை பெற்றுக் கொள்வது அவசியம். பின்னர் அவற்றை இறக்குமதி செய்வதற்கு சிரமங்களை எதிர்நோக்கலாம்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருவோரை தடுப்பதற்கு தற்போது எந்த பொறிமுறையும் இல்லை, எனவே புதிய கொரோனா பிறழ்வு ஏற்கனவே நாட்டில் உள்ளதா என்பதை அவர்களால் உறுதிப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நிபுணர்களின் கூற்றுப்படி, சுகாதார வழிகாட்டல்களை கடைபிடிக்கும் போது, முகக்கவசம் பயன்படுத்துவது கொவிட் 19 க்கு எதிரான சிறந்த தடுப்பு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதமராக வடக்கு எம்.பி...

ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று பாராளுமன்றத்தில் பிரதிபலித்தது மக்களின் விருப்பம் அல்ல என்றும் மக்களின் விருப்பத்தை சிதைப்பது மட்டுமே என்றும் அவர் கூறினார். ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் குறித்து தமக்கு ஏற்கனவே தெரியுமென்று குறிப்பிட்ட அவர், இந்த முடிவு எதிர்க்கட்சிகள் வலுப்பெறுவதையும் காட்டுகிறது என்றார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவு தொடர்பில் தமது தரப்பு யோசனை முன்வைத்ததாகவும் அவை ஏற்கப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,முதலில் புதிய ஜனாதிபதிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களிடம் வலுவான எதிர்க்கட்சி முகாமுள்ளது.

இந்த பாராளுமன்றத்தில் மக்களின் விருப்பத்தின் திரிபுபடுத்தப்பட்ட பிரதிபலிப்பு காட்டப்பட்டது.வெளியிலுள்ள மக்களுக்கும் இந்த சபைக்குமிடையில் பெரும் முரண்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. நாடு ஒரு பெரிய பேரழிவிலுள்ளது. இளம் தலைமுறையினர் தங்களது எதிர்காலம் குறித்து மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி பதவிக்கு சபாநாயகரின் பெயரும் பிரதமர் பதவிக்கு சுமந்திரன் எம்.பியின் பெயர் கூட பிரேரிக்கப்பட்டது. இரு பெண்களை நியமிக்க வேண்டுமென ரவூப் ஹக்கீம் யோசனை முன்வைத்தார்.பிரதமர் பதவியை வடக்கு தமிழ் எம்.பி ஒருவருக்கு வழங்க முடியுமாக இருந்தால் வெளியில் இந்த சபை குறித்து வெளியில் கௌரவமான நிலை உருவாகியிருக்கும். பெண் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தால் முன்மாதிரியாக அமைந்திருக்கும்.

டளஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதாக த.தே.கூட்டமைப்பு , சுதந்திர கட்சி மற்றும் சுயாதீனமான குழு உட்பட பல கட்சிகள் அறிவித்திருந்தன. அவற்றின் ஆதரவு கிடைத்திருந்தால் 113 ற்கும் அதிக வாக்குகள் கிடைத்திருக்கும். கடந்த காலத்தில் பணத்துக்காக எம்.பிக்கள் விலை போயினர். அதே நிலை இன்றும் நடந்திருக்கலாம் என்றார்.(பா)

## நாட்டின் முன்னேற்றத்துக்கு...

தெரிவித்தார். புதிய ஜனாதிபதிக்கான தெரிவு நிறைவடைந்த பின்னர் சபையில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தற்போது நாடு பெரும் நெருக்கடியான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளதென்பதைக் குறிப்பிட்ட அவர்,

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இது என்றும் நாட்டின் 22,000 மில்லியன் மக்களும் எம்மோடு இருப்பார்களென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கான தெரிவில் தம்மை முன்மொழிந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வழிமொழிந்த அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் உள்ளிட்ட அனைவருக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்ட அவர், சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

குணமடைந்த நாட்டுக்கு எழுந்து நிற்க முடியும் ஆனால் நோய் உள்ள நாடு எழுந்து நிற்க முடியாது. சூழ்ச்சியான அரசியல் கலாசாரத்தை நிறைவு செய்வதற்காகவே நான் ஜனாதிபதி தெரிவில் போட்டியிட்டேன்.

அரசியல் கலாசாரம் சீரழிந்துள்ளதுடன் அதன் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பென்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக தனியான நிகழ்ச்சி நிரலை முக்கியமாக்கிக் கொண்டு அரசியலமைப்பிலும் அரசியலமைப்பு திருத்தத்திலும் செயற்பாடுகளை மேற்கொண்டு மக்களின் இறைமையை காட்டிக் கொடுத்து சுதந்திரம் அடைந்த தினத்திலிருந்து நாம் அனுபவித்த வஞ்சகமான அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே நான் போட்டியிட்டேன்.

அந்த வகையில் வாக்குகள் மற்றும் இலக்கத்தின் மூலம் தோல்வியடைந்தாலும் எனக்கு தைரியமூட்டிய ஒத்துழைப்புகள் வழங்கிய அனைவருக்கும் நான் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் முதல் தடவையாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அவசியம் எமக்கு இருந்தது. நாம் தோல்வியடைந்தாலும் அதற்கான நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு பாதிப்படையாது.பெறுபேறுகள் எதுவாக இருந்தாலும் இந்த ஒன்றிணைப்பு உலகுக்கே முன்னுதாரணத்தை வழங்கியுள்ளது.

பிராந்தியத்திலேயே பழமையான ஜனநாயக நாடென்ற வகையில் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளும் அதற்காக வழி வகுத்துள்ளன. அரசியல் மற்றும் அரசியல் செயற்பாடுகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிளவு பட்டது போதும் நாட்டை...

தம்முடன் போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் டளஸ் அழகப்பெரும, அனுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கும் இத்தகைய அழைப்பை விடுத்த புதிய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சீ.வி. விக்கினேஸ்வரன் உள்ளிட்ட அனைத்து தலைவர்களுக்கும் கட்சிகளுக்கும் சபையில் இந்த அழைப்பை விடுத்தார்.

அனைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தி சிறந்த வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப் போவதாக சபையில் தெரிவித்த புதிய ஜனாதிபதி, உடனடியாகவே அதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டார்.

புதிய ஜனாதிபதியாக நேற்றைய தினம் 134 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி தெரிவில் வெற்றியடைந்த ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சபாநாயகரே, நீங்களும், நானும் 1973 ஆம் ஆண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்தோம். அந்த வகையில் உங்கள் முன்னிலையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை பெருமையாகக் கருதுகிறேன்.

45 வருடகாலம் பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டுள்ள எனது வாழ்க்கை பாராளுமன்றத்துடனேயே உள்ளது. பாராளுமன்றத்தினூடாக எனக்கு இந்த கௌரவத்தை வழங்கியுள்ளமைக்கு விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொலை செய்யப்பட்டதையடுத்து புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய பாராளுமன்றம் இவ்வாறு கூடியது.

அப்போது டி.பி.விஜேதுங்க போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று ஜனாதிபதி தெரிவுக்காக கலந்து கொண்டவர்களில் 15 பேர் இன்றும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதியை தெரிவு செய்வது வாக்கெடுப்புடன் முதன் முறையாக இடம்பெற்றுள்ளது.

பல்வேறுப்பட்ட பேச்சுவார்த்தை ஊடாக பாராளுமன்ற ஜனநாயகத்துக்கமைய எவ்வித முரண்பாடுகளுமின்றி ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்பில் எனக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கும், வாக்களிப்பில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் புதிதாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இளைஞர்கள் புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்க்கின்றனர். பூகோள நெருக்கடிகளுக்கு சிக்காமல் முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. பழைய அரசியலை மக்கள் எதிர்பார்க்கவில்லை. புதிய அரசியல் கலாசாரத்தை மக்கள் எதிர்பார்க்கிறனர். என்னுடன் ஜனாதிபதிக்கான தெரிவில் போட்டியிட்ட டளஸ் அழகப்பெரும, அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றிணைந்து புதிய வேலத்திட்டத்துடன் செயற்படுவோம். சஜித் பிரேமதாச, அனுர குமார திஸாநாயக்க, ஆகியோரும் எம்முடன் ஒன்றினைந்து செயற்பட வேண்டும்.

அதேபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், மற்றும் கஜேந்திரகுமார்.பொன்னம்பலம்,சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

பிளவுப்பட்டது போதும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் இன்று முதலே அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள தயாராக உள்ளேன்.

அதேவேளை, பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில்புதியஜனாதிபதியாகப்பதவிப் பிரமாணம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு நான் சபாநாயகரைக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க...

வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது விசேட அம்சமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்காக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுன எம்.பி டலஸ் அழகப்பெரும மற்றும் ஜே.வி.பி தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர்.

1981ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் கட்டளைச் சட்டத்துக்கமைய, பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டதோடு நேற்று (20) இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

இதற்கமைய பாராளுமன்றம் நேற்று காலை 10.00 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வாக்கெடுப்பு தொடர்பான சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் ஆகியோரின் அறிவிப்பு மற்றும் விளக்கத்தை தொடர்ந்து இரகசிய வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சபை நடுவில் வாக்குப்பெட்டி வைக்கப்பட்டு வாக்களிப்பதற்காக மறைவான இடமும் ஒதுக்கப்பட்டது. தெரிவத்தாட்சி அதிகாரியாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க செயற்பட்டதோடு அவருக்கு உதவியாக ஏனைய அதிகாரிகள் செயற்பட்டார்கள். வெற்று வாக்குப் பெட்டி சபைக்கு காண்பிக்கப்பட்ட பின்னர் அது சீல் வைக்கப்பட்டு காலை 11.20 மணியளவில் வாக்கெடுப்பு ஆரம்பமானது. வாக்குச் சீட்டுகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கையெழுத்துடன் எம்.பிக்களுக்கு வழங்கப்பட்டன. முதலில் சபாநாயகர் வாக்களித்தார். தொடர்ந்து அமைச்சர்கள்,எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எம்.பிகள் வாக்களித்தனர்.

சுமார் 11.50 மணியளவில் வாக்களிப்பு நிறைவடைந்தது.

இதில் 225 எம்.பிக்களில் 223 பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் எம்.பி ஆகிய இருவரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

12.00 மணியளவில் வாக்குகள் எண்ணும் பணிகள் சபை நடுவில் இடம்பெற்றது. வாக்கு எண்ணுவதை கண்காணிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் ஹரின் பெர்னாண்டோவும், டலஸ் அழகப்பெரும எம்.பியின் சார்பில் டிலான் பெரேராவும், அநுரகுமார திஸாநாயக்கவின் சார்பில் விஜித ஹேரத்தும் நியமிக்கப்பட்டனர்.

முதலில் செல்லுபடியான மற்றும் செல்லுபடியற்ற வாக்குகள் எண்ணப்பட்டன. இதன் போது 04 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையில் 12.40 மணியளவில் வாக்குகள் எண்ணப்பட்டு செயலாளர் நாயகத்தினால் முடிவுகள் சபையில் அறிவிக்கப்பட்டன.

முதலில் டளஸ் அழகப்பெரும பெற்ற வாக்குகள் அறிவிக்கப்பட்டது, அவர் 82 வாக்குள் பெற்றிருந்தார். அடுத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு 134 வாக்குகள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து எம்.பிக்கள் எழுந்து நின்று கரகோசமெழுப்பி தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர். அடுத்த அனுர குமார திசாநாயக்க எம்.பியின் வாக்குகள் அறிவிக்கப்பட்டது, அவருக்கு 03 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வேட்பாளர்களான டளஸ் அழகப்பெரும, அனுர குமார திசாநாயக்க ஆகியோரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபை முதல்வர் தினேஷ் குணவர்தன,சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோரும் நன்றி தெரிவித்து உரையாற்றினர். அதனை தொடர்ந்து பாராளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பை முன்னிட்டு பாராளுமன்றத்தை சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப் படுத்தப்பட்டிருந்தன. புதிய ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட போது , வெற்றிடமாகிய ஜனாதிபதி பதவிக்காக அப்போதைய பிரதமராகவிருந்த டி.பி. விஜேதுங்க எம்.பி அனைவரின் ஒருமித்த இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதியாக தெரிவானது குறிப்பிடத்தக்கது. (பா)

## நாட்டை சரியான திசையில்... *(03ஆம் பக்கத் தொடர்)*

பெற்றுக் கொடுப்பதற்கும் வழியேற்படுத்தும் என்பதே எமது அரசியல் தீர்மானங்களின் அடிப்படையாகும்.

வெல்லுகின்ற பக்கத்தில் அணி சேர்வது அரசியல் சாணக்கியமல்ல. நாம் தீர்மானித்த பக்கத்தை வெல்லச் செய்வதே அரசியல் சாணக்கியமாகும்.

அந்தவகையில் எமது அனுபவமும், தீர்மானங்களும் அரசியல் சாணக்கியமானது என்பதை நாம் ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் மகத்தான வெற்றி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை வெற்றிபெறச் செய்யும் வெற்றியாக அமையும். இந்நிலையில், எமக்கான ஆதரவை எமது மக்கள் இன்னும் அதிகமாக வழங்குவார்களாயின், மேலும் பல விடயங்களை சாத்தியமானதாக்க எம்மால் முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பியூலன்ஸில் வந்து...

இரண்டு எம்.பிக்கள் அம்பியூலன்ஸில் வந்து வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் ஆகியோர் இவ்வாறு வாக்களித்தனர். இதில் சமன்பிரிய ஹேரத் சேலைன் போத்தலோடு வைத்தியசாலையிலிருந்து பாராளுமன்றம் வந்து வாக்களித்தார். மற்றைய பாராளுமன்ற உறுப்பினரை பாராளுமன்ற ஊழியர்கள் கைத்தாங்கலாக அழைத்து வந்தனர். இது தவிர தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் உதவியாளர்களின் உதவியுடன் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

சுகயீனம் காரணமாக இரு எம்.பிக்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் தமது வாக்கை பதிவு செய்திருந்ததுடன், வாக்களித்ததன் பின்னர் அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

## புதிய ஜனாதிபதியாக ரணில்...

பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

இதற்கான விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவானார். தான் பாராளுமன்ற வளாகத்தினுள் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள விரும்புவதாக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் புதிய ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இதற்கமைய சத்திய பிரமாணத்துக்கான விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவின் முன்னிலையில் புதிய ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்ய இருப்பதோடு இந்த நிகழ்வில் ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிக்கள் பங்கேற்க உள்ளனர்.

மத அனுஷ்டானங்களுடன் காலை 10.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(பா)

## வாரத்தில் மூன்று நாட்கள்...

மாத்திரம் பாடசாலைகளில் கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீடுகளிலிருந்து அல்லது இணையவழி கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை, செப்டெம்பர் 7 ஆம் திகதி வரையில் நீடிக்கப்படவுள்ளதுடன், இரண்டாம் மற்றும் 3 ஆம் தவணையை நடத்துவதற்கான கால எல்லை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதலாம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையில், திருத்தப்பட்ட பாடத் திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி முதல் அது தொடர்பான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. அத்துடன், முதலாம் தவணை பரீட்சை நடத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வாராந்தம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய 3 தினங்களில் மாத்திரம் பாடசாலைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நடத்தப்படாத புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் இணையவழியில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி தெரிவில் இந்தியா அழுத்தமா?...

உயர் ஸ்தானிகராலயம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெறும் வாக்களிப்பு தொடர்பாக இலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்குடன் இந்தியாவிலிருந்து அரசியல் ரீதியான அழுத்தம் வழங்கப்பட்டதாக ஆதாரமற்றதும் ஊகங்களின் அடிப்படையிலும் வெளியாகியிருக்கும் ஊடக அறிக்கைகள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம்.

இந்த ஊடக அறிக்கைகள் முழுக்க முழுக்க பொய்யானதென நாம் திட்டவட்டமாக மறுக்கின்றோம். சிலரது கற்பனையின் தோற்றப்பாடாகவே இவ்வாறான அறிக்கைகள் அமைகின்றன.

ஜனநாயக வழிமுறைகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசியலமைப்பு விதிகள் ஆகியவற்றுக்கு அமைவாக தமது அபிலாஷைகளை நனவாக்க விரும்பும் இலங்கை மக்களுக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்கள் மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளில் தலையிடுவதில்லையென்றும் மீண்டும் வலியுறுத்தி கூறப்படுகின்றது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணிலுக்கு இ.தொ.கா...

வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க துரிதமாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பொறுப்பேற்ற இரண்டு மாதக்காலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினையை சீர்செய்வதற்காக வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதான கட்சி என்ற அடிப்படையில் இறுதி தருணம் வரை பலகோணங்களில் கலந்துரையாடல் நடத்தியே யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து இ.தொ.கா முடிவெடுத்தது.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் மற்றும் சர்வதேச நட்புறவை கொண்ட நபர் யார் என்பதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இ.தொ.கா மக்களின் நலன்களை ஆராய்ந்து அதற்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில்தான் எப்போதும் தீர்மானம் எடுத்துவருகிறது. அதன் அடிப்படையிலேயே ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளோம். நாட்டை மீட்டெடுக்க அவர் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம். புதிய ஜனாதிபதியின் பயணம் வெற்றிபெற இ.தொ.கா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

## ரணில் விக்ரமசிங்க...

★ 1980ஆம் ஆண்டில் கல்வி அமைச்சரானார்.

★ ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் அமைச்சரவையில் 1989 இல் கைத்தொழில் அமைச்சராகவும், 1990 இல் கைத்தொழில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகவும் இருந்தார்.

★ 1993ஆம் ஆண்டில் பிரதமரானார்.

★ 1994 பொதுத் தேர்தலில் பிரதமர் பதவியை இழந்தார்.

★ 1994 இல் களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவை திருமணம் செய்துகொண்டார்.

★ 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

★ 2001இல் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக பிரதமரானார்.

★ 2004ஆம் ஆண்டு மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரானார்.

★ 2015இல், மூன்றாவது முறையாக பிரதமரானார். 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நான்காவது முறையாக பிரதமரானார்.

★ 2017இல் 52 நாட்களில் பிரதமர் பதவி பறிபோனது.

★2018இல் ஐந்தாவது முறையாக மீண்டும் பிரதமரானார்.

★ 2019இல் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

★ 2020 பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவில்லை, பின்னர் தேசிய பட்டியலிலிருந்து பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ 2022 மே 12 அன்று, அவர் ஆறாவது முறையாக பிரதமரானார்.

★ 2022 ஜூலை 15, அன்று பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

★ 2022 ஜூலை 20 நேற்று, பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நாட்டின் எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# காலி வலய பதிற்கடமை காதியாக நியமனம்

(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)

பலப்பிட்டிய, எல்பிட்டிய காதி நீதிபதி ஏ.ஸீ.எம் சாபி, காலி வலய பதிற்கடமை காதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் காதி எம். ஜீ.எம்.அலி இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது. காலி மாவட்டம் முழுவதற்குமாக இவரது நியமனம் அமைந்துள்ளது.

2015 ஆம் ஆண்டிலும் இப்பகுதியில், பதிற்கடமை புரிந்துள்ள இவரது அனுபவங்களை கொண்டு இவர் கடமையை ஏற்றுக் கொண்டார்.இப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் விவாகரத்துகளை இயன்றவரை குறைப்பதற்கான சில செயற்திட்டங்களையும் ஏ,ஸீ.எம் சாபி நடைமுறைப்படுத்தவுள்ளார்.இதற்காக பிரபல பள்ளிவாசல்களை மையமாகக் கொண்டு துறைசார்ந்த பிரமுகர்களை இனங்கண்டு அவர்களது ஒத்துழைப்புக்களும் பெறப்படவுள்ளன. “முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமும் நடைமுறைகளும்” பற்றிய விழிப்புணர்வு கூட்டங்களை நடத்துதல்;நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையில் குடும்ப வாழ்க்கை பிரச்சினைகளை சமாளித்தல், பிளவுகள், பிரிவினைகள் இல்லாது செய்தல், இணைந்து வாழுதல், தாபரிப்புச் செலவு வழங்குதல், வழக்குத்தாக்கல், சமரசம் போன்றவற்றில் மக்களுக்கான “காதி நீதிமன்ற இடம்பெயர் சேவைகளை நடத்துதல் பற்றியும் பிரமுகர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும்,இதற்காக இவர்களது பங்களிப்பையும் அவர்,கோரியுள்ளார். இதற்கு மேலதிகமாக வேறு காதி நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்க முடியாதுபோன வழக்குகள் பலவற்றிற்கும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் இவர்,விஷேட காதியாக நியமிக்கப்பட்டு அவை சிறந்த முறையில் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இவர் தென் மாகாணத்தில் ஒரு சிரேஷ்ட காதியாகவுமுள்ளார்.

# போட்டி நிகழ்ச்சியில் வென்றோருக்கு பரிசுகள்

புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் மன்னார் வீதி தாருஸ்ஸலாம் மஸ்ஜிதின், தாருஸ்ஸலாம் முஸ்லிம் மஜ்லிஸ் நடாத்திய போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. அமைப்பின் பொறுப்பாளர் சவ்வாப் ரிபாயிஸ் தலைமையில் புத்தளம் வெஸ்டர்ன் சோல்டன் வீதியில் அமைந்துள்ள ஆர். எஸ். மண்டபத்தில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் இயங்கும் நூலகத்தை பயன்படுத்தி, மாணவர்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட வினா விடை போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கே இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

# ஆரம்ப பாடசாலை மாணவர்களின் கண்காட்சி

(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)

பேருவளை மருதானை அல்அமானத் இஸ்லாமிய ஆரம்பப் பாடசாலையின் (2022) ஆண்டிற்கான எக்ஸ்போ கல்விக் கண்காட்சி அதிபர் பஸ்லா முர்ஸி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலைப் பணிப்பாளரும் பேருவளை நகரசபை உறுப்பினருமான டில்சாத் அன்வரின் வழிகாட்டலின் கீழ் இது,ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை வங்கி பேருவளை கிளையின் முன்னாள் முகாமையாளரும் பிரபல எழுத்தாளருமான ரீ.எம்.ஸபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

களுத்துறை நாகொட வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி டொக்டர் பசீர் முஸ்தபா, பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுசைன் (நளீமி) உட்பட பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். சிறார்களின் கைப்பணி திறமைகளை கலந்துகொண்ட பிரமுகர்கள் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கை, வட்டுருகம, மிரிஸ்வட்ட வீதி, சமத் ரோகன பண்டார மாபா (தே.அ.அ.இல. 603511190V) ஆகிய நான், கம்பஹா பகிரங்க நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். வீரசேகர ராஜகருணாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1987, ஒக்டோபர், 13 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித்தத்துவ இல. 4562 மற்றும் வட்டுருகம மிரிசுவட்ட வீதி, ஜெகத் ஆனந்த பண்டார மாபா (தே.அ.அ.இல. 582436193V) என்பவரை நியமித்திருந்து எனது உண்மையான சட்ட ரீதியான அற்றோணித் தத்துவத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன். சொல்லப்பட்ட அற்றோணியின் கீழ் என் பெயரில் அல்லது என் சார்பாக மேற்கொள்ளப்படும்
எந்த சட்டங்களும், உறுதிகளும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பிறகு நான் பொறுப்பாக மாட்டேன்.

**சமத் ரோகன பண்டார மாபா**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக இத்தால் நாம் அறிவித்தல் விடுக்கின்றோம்.

கம்பனியின் பழைய பெயர்:

**த்ரீ டி எச் ராஜாவலி (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி இலக்கம்: PV 130441

பதிவு முகவரி: **‘RNH ஹவுஸ்’ இல. 622-B, கோட்டே வீதி, கோட்டே**

கம்பனியின் புதிய பெயர்:

**த்ரீ டி எச் பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**புரொபஷனல் எஸயின்மன்ட்ஸ் அன்ட் செக்ரடேரியல் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**18 ஜுலை 2022**

திகதி 19.07.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4821
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,014,070.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,729,761.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 1 4 0 0 7 3

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 851
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,930,380.00
Z 11 14 25 49
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,359,962.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 130
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,086,700.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 06 20 39 47
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,251,555.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1299
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,273,740.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 0 8 5 3 1 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,378,932.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3063
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,137,240.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 25 64 69 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,536,618.00

கோடி 26+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1169
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,371,960.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,330,002.00
I 03 01 17 28 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

## உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் 2022 பொது ஆலோசனை கேட்டல்

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2022 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய வாய்மொழி மூல பொது ஆலோசனை கேட்டலை 2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் **28ஆம் திகதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்** நடத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடத்த தீர்மானித்துள்ளது.

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் அமைய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவற்கான விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இந்த மூல பொது ஆலோசனை கேட்டலின் போது, உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பாதிப்புகள் அல்லது சிக்கல்கள் அல்லது தகவல்கள் குறித்து வாய்மொழியாக சமர்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அழைப்புவிடுக்கப்படுகிறது. **சூம் (ZOOM) செயலி மூலம் வாய்வழி ஆலோசனையை அன்றைய தினம் (இணையம் மூலமாகவும்)** சமர்ப்பிக்கமுடியும்.

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள வாய்மொழி மூல ஆலோசனையை வழங்க கீழே உள்ள ஏதேனும் முறைகளைப் பயன்படுத்தி பதிவுசெய்யுமாறு பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தொடர்புகளுக்கு:** 071 862 2800
**இணையமூலம் பதிவு செய்ய:** https://forms.gle/bjukCvBy2NTDiCxh8
**வாட்ஸ்எப் மூலம் பதிவு செய்ய:** 076 427 1030
**மின்னஞ்சல்:** consultation@pucsl.gov.lk
**தொலைநகல்:** 011 239 2641
**எழுத்த மூலம்** : “உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் 2022”
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

QR ஸ்கேன் செய்யவும்

**தொலைபேசி** : 011 239 2607/8
ஆலோசனை பத்திரத்தை www.pucsl.gov.lk/notices இல் பார்வையிடலாம்

ஆணைக்குழுவின் உத்தரவுப்படி

**ஜனக ரத்நாயக்க**
**தலைவர்**

திகதி: 21 ஜீலை 2022

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/089**<br>வாடகைக்கு வீடு மின் அத்தியட்சகர் விடுதி (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருட காலம்) | 03.08.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/090**<br>வாடகைக்கு வான் பொறியியல் உதவியாளர் கல்முனை (இரண்டு வருட காலம்) | 03.08.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை 067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொது பொறியியலாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# சர்வதேச செய்திகள்

## புதிய உச்சத்தை தொட்டுள்ள ஐரோப்பாவின் அதீத வெப்பம்



மேற்கு ஐரோப்பாவில் கொடிய வெப்ப அலை தாக்கி வரும் நிலையில் வெப்பநிலை புதிய உச்சத்தை தொட்டிருப்பதோடு தீயணைப்பு வீரர்கள் புதிய காட்டுத் தீ சம்பவங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வழக்கமாக மிதமான காலநிலையைக் கொண்ட பிரிட்டனில், வெப்பநிலை முதல் முறையாக 40 டிகிரி செல்சியஸை தாண்டியுள்ளது.

ஜெர்மனியில் ஆண்டின் வெப்பமான நாள் பதிவாகி இருக்கும் அதே நேரம் கடந்த சில நாட்களாக அதீத வெப்பம் தாக்கி போர்த்துக்கலில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கண்டம் முழுவதும் காட்டுத் தீ பரவியுள்ளது. மிக மோசமான நிலையை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்று ஐ.நாவின் உலக வானிலை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தால் வெப்ப அலை அடிக்கடி நிகழும் ஒன்றாக மாறி இருப்பதோடு அதிக தீவிரம் கொண்டதாகவும் உள்ளது.

“எதிர்காலத்தில் இவ்வாறான வெப்ப அலைகள் சாதாரணமான ஒன்றாக இருக்கும். இதனை விடவும் கொடிய நிலையை நம்மால் பார்க்க முடியும்” என்று உலக வானிலை அமைப்பின் தலைவர் பெட்டரி டாலஸ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் முன்னர் காணாத கடும் வெப்பம் தவிர, அங்கு காட்டுத் தீயும் ஏற்பட்டுள்ளது. பிரான்ஸில் கடந்த திங்கட்கிழமை 64 வெவ்வேறு பகுதிகளில் வெப்பநிலை சாதனை உச்சத்தை பதிவு செய்திருந்தது.

வெப்ப அலை வடக்கு மற்றும் கிழக்கை நோக்கி தொடர்ந்து நகர்ந்து வரும் நிலையில் ஜெர்மனியில் தொடர்ந்து காலநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கலில் வெப்பநிலை கணிசமான அளவு வீழ்ச்சி கண்டபோதும், வெப்ப அலையுடன் தொடர்புபட்ட 1000க்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

கிரேக்கத்தில் ஏதன்ஸுக்கு அருகில் பென்டலியின் மலைப்பிராந்தியத்தில் காட்டுத் தீ கட்டுக்கடங்காது பரவி வருகிறது. இங்கு வீடுகள் சேதமடைந்திருப்பதோடு நான்கு பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இத்தாலியிலும் நேற்று வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை தொட்டிருப்பதாக கூறப்படுகிறது. நாட்டின் பல பகுதிகளிலும் காட்டுத் தீ பரவி உள்ளது.

## தாய்வானுக்கான அமெ. ஆயுத உதவியை கைவிட அழுத்தம்



தாய்வானுக்கு 108 மில்லியன் டொலர் இராணுவ மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒப்புதல் அளித்த நிலையில் தாய்வானுக்கான அயுத விற்பனையை கைவிடும்படி சீனா வலியுறுத்தியுள்ளது.

இந்த புதிய உடன்படிக்கை 2022இல் தாய்வானுக்கு அமெரிக்கா மேற்கொளும் நான்காவது ஆயுத உடன்படிக்கை என்பதோடு பைடன் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஐந்தாவது உடன்படிக்கை என்று சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இந்த ஆயுத விற்பனை ஒரே சீனா கொள்கையை மோசமாக மீறுவது என்றும் சீனாவின் இறைமை மற்றும் பாதுகாப்பு நலனை கடுமையாக குறைமதிப்புக்கு உட்படுத்துவதாகவும் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் தெரிவித்துள்ளார்.

## கொங்கோவின் சுரங்கங்களில் 40,000 குழந்தை தொழிலாளர்



கொங்கோவின் கோபல்ட் உலோக சுரங்கங்களில் சீனா 40,000 குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்தி இருப்பது மனித உரிமை மீறல்கள் தொடர்பான கொங்கிரஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மின் சாதனங்கள் மற்றும் மின்சார கார்களை இயக்கப் பயன்படுத்தும் கோபல்ட் உலோக சுரங்கத்தில் சீனா அபாயகரமான வேலைச் சூழலுக்கு சிறுவர்களை கட்டாயப்படுத்துவதாக கதொலிக் செய்தி நிறுவனத்தில் செல்டா கால்ட்வெல் எழுதியுள்ளார்.

கொங்கோ சுரங்கத் தொழில்துறையில் சீனா பிரதான வெளிநாட்டு சக்தியாக இயங்கி வருகிறது. 2019இன் படி சீனா அதன் 83 வீதமான கோபல்ட் உலோம் மற்றும் 9 வீதமான சுத்திகரிக்கப்பட்ட செம்பு மற்றும் செப்புக் கலவையை கொங்கோவில் இருந்து இறக்குமதி செய்கிறது.

## ஹொங்கொங் போராட்டம்: உலகில் ஆதரவு அதிகரிப்பு



ஹொங்கொங்கில் ஜனநாயக சார்பு இயக்கமும் ஏனைய ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான போராட்டமும் உலகின் பல நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அவற்றுக்கு தொடர்ந்தும் ஆதரவு அதிகரித்து வருவதாக யுரோப்பியன் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தியனன்மென் சதுக்க சம்பவத்தின் 33ஆவது ஆண்டு நிறைவு மற்றும் ஹொங்கொங் ஜனநாயக சார்பு இயக்கத்தின் மூன்றாண்டு நிறைவு என்பவற்றின் நிமித்தம் லண்டனில் அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஹொங்கொங்கின் சுதந்திரத்தை வலியுறுத்தியதோடு திபெத் மக்களுக்கும் உய்குர் முஸ்லிம்களுக்கும் நீதி கிடைக்கப் பெற வேண்டுமெனக் கோரினர். அதேநேரம் ஹொங்கொங்கில் ஜனநாயக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து கனடாவிலும் ஹொங்கொங் வாசிகள் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

## அவுஸ்திரேலியாவில் கொவிட் தொற்று மீண்டும் அதிகரிப்பு



அவுஸ்திரேலியாவில் கொவிட்–19 தொற்றினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை சாதனை அளவை நெருங்கி இருக்கும் நிலையில் வீட்டில் இருந்து வேலை பார்ப்பது மற்றும் உள்ளகப் பகுதியில் முகக்கவசம் அணிவதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிஏ.4 மற்றும் பிஏ.5 ஒமிக்ரோன் உப திரிபுகள் பரவி வருவதால் அவுஸ்திரேலியா கொரோனா தொற்றின் மூன்றாம் அலை ஒன்றின் மத்தியில் இருப்பதாக கூறப்படுகிறது. நோய் அதிகரிப்பை கையாள்வதற்கு இந்த மாதம் ஆரம்பத்தில் இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இந்நிலையில் தினசரி தொற்றுச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை 50,248 ஆக அதிகரித்துள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களில் உச்ச எண்ணிக்கையாகும்.

கொவிட் தொற்றுடன் சுமார் 5,239 பேர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது கடந்த ஜனவரியில் பதிவான சாதனை எண்ணிக்கையான 5,390 ஐ விட சற்றே குறைவாக உள்ளது.

## 'நெட்பிளிக்ஸ்' வாடிக்கையாளர் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி




நெட்பிளிக்ஸ் நிறுவனம் அதன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை இரண்டாம் காலாண்டில் குறைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அது 2 காலாண்டுகளுக்கு வரிசையாக வாடிக்கையாளர்களை இழந்துள்ளது. இருப்பினும் நிலையில் முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுவதாக நிறுவனம் அதன் முதலீட்டாளர்களிடம் கூறியது.

ஆக அண்மைய காலாண்டில் நெட்பிளிக்ஸ் சுமார் 970,000 வாடிக்கையாளர்களை இழந்தது. தற்போது அதன் தளத்தில் 221 மில்லியனுக்கும் குறைவான பயனீட்டாளர்கள் உள்ளனர்.

இருப்பினும் பங்குச் சந்தையில் நெட்பிளிக்ஸ் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் முதலீட்டாளர்கள் அதன் மீது இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பதை அது காட்டுகிறது.

இவ்வாண்டு முதல் காலாண்டில் நெட்பிளிக்ஸ் சுமார் 200,000 வாடிக்கையாளர்களை இழந்தது. அதன் வருமான அறிக்கையில் நிறுவனம் இந்தக் காலாண்டில் கூடுதலாக 1 மில்லியன் வாடிக்கையாளர்களைப் பெற முனைவதாகக் கூறியது.

அண்மைய காலாண்டில் நிறுவனத்தின் நிலை மோசமாக இல்லாவிட்டாலும் அது கவலைக்குரியதாக உள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

## ட்விட்டர் – மஸ்க் வழக்கு விசாரணை ஒக்டோபரில்




உலகின் பெரும் செல்வந்தர் இலோன் மஸ்க்கிற்கு எதிரான ட்விட்டரின் வழக்கை வரும் ஒக்டோபரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ட்விட்டர் சமூகதளத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்கும் ஒப்பந்தத்தில் இருந்து மஸ்க் ஜூலை ஆரம்பத்தில் வெளியேறியதை அடுத்தே அவர் மீது ட்விட்டர் நிறுவனம் வழக்குத் தொடுத்தது.

மக்ஸ் ஒப்புக்கொண்ட பங்கு ஒன்றை 54.20 டொலர் விலைக்கு வாங்கும் உடன்படிக்கையை அவர் பூர்த்தி செய்ய நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றே ட்விட்டர் கோருகிறது.

எனினும் அந்த நிறுவனம் போலிக் கணக்குகள் பற்றிய தகவலை மறைத்ததாக மஸ்க் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கின் சிக்கலான தன்மையை கருதி விசாரணையை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் எடுத்துக் கொள்ளும்படி மஸ்கின் சட்டக்குழு கேட்டநிலையில் ட்விட்டர் செப்டெம்பரில் எடுத்துக்கொள்ளும்படி கோரியது.

விசாரணையின்போது நீதிபதியிடம் முறையிட்ட ட்விட்டர் வழக்கறிஞர் வில்லியம் சாவிட்,"வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும், அதற்கான நியாயமான பல காரணங்கள் எங்களிடம் இருக்கின்றன" என்று தெரிவித்தார்.

இந்நிலையில் டெல்வார் மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதி ஒருவர் நிறுவனத்தின் கோரிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்றுள்ளார்.

## பிரிட்டன் பிரதமருக்கான போட்டி: சுனக் 4ஆம் சுற்றிலும் முன்னிலை



பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் இடத்தை நிரப்புவதற்கான ஆளும் கன்சர்வேடிவ் கட்சி எம்.பிக்கள் இடையே இடம்பெற்ற போட்டியில் இந்திய வம்சாவளியான முன்னாள் நிதி அமைச்சர் ரிசி சுனக் தொடர்ந்தும் முன்னிலை பெற்றுள்ளார். எனினும் எஞ்சியுள்ள இரு போட்டியாளர்களும் அவருக்கு கடும் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

இந்த பிரதமர் பதவிக்கான போட்டியின் 4ஆம் சுற்று வாக்கெடுப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் முன்னாள் சமத்துவ அமைச்சர் கெமி படனொக் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இதன்மூலம் சுனக்குடன், வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் மற்றும் கனிஷ்ட வர்த்தக அமைச்சர் பென்னி மார்டொன்ட் தொடர்ந்து போட்டியில் உள்ளனர்.

கன்சர்வேடிவ் கட்சி எம்.பிக்கள் அளித்த இந்த வாக்கில் படனொக் 59 வாக்குகளையே பெற்றார். இதில் சுனக் மொத்தம் 118 வாக்குகளை பெற்றதோடு, மார்டொன்ட் 92 வாக்குகளையும், ட்ரஸ் 86 வாக்குகளையும் பெற்றனர்.

இந்தப் போட்டியில் மற்றொரு வேட்பாளர் நீக்கப்படுவதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியின் 200,000 உறுப்பினர்கள் அதன் புதிய தலைவரை தேர்வு செய்யவுள்ளனர். அவ்வாறு தலைவராக தேர்வு செய்யப்படுபவரே பிரிட்டனின் அடுத்த பிரதமராகவும் நியமிக்கப்படுவார்.

புதிதாகப் பொறுப்பேற்கவிருக்கும் பிரதமரின் பெயர் அடுத்த மாதம் 5ஆம் திகதி அறிவிக்கப்படும்.

கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி அரசு இல்லத்தில் கேளிக்கை விருந்து நடத்தியது உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் காரணமாக தனது கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியையும் பிரதமர் பதவியையும் பொரிஸ் ஜோன்ஸன் கடந்த 7ஆம் திகதி இராஜினாமா செய்தார்.

## நுளம்பால் சிக்கிய திருடன்



சீனாவில் வீடு புகுந்து திருடிய ஒருவரை அவரைக் கடித்த நுளம்புகளில் இருந்த இரத்த மாதிரியைக் கொண்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புஜியான் மாகாணத்தின் புசு நகரில் உள்ள தொடர்மாடிக் கட்டடம் ஒன்றுக்குள் கடந்த மாதம் இரவு வேளையில் புகுந்திருக்கும் அந்தத் திருடன் விட்டில் இருந்தவற்றை திருடியது மாத்திரமல்லாமல், இரவு முழுவதும் அந்த வீட்டிலேயே தங்கி சமைத்து சாப்பிட்டுள்ளார். இது பற்றி விசாரணை நடத்திய பொலிஸார், வீட்டுச் சுவரில் அடித்துக் கொல்லப்பட்ட இரண்டு நுளம்பில் இருந்த இரத்த மாதிரியை சேகரித்து மரபணு சோதனை நடத்தியுள்ளனர். இது ஏற்கனவே திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட சாய் என்பவருடன் பொருந்தி இருந்தது.

அவரை பொலிஸார் கைது செய்த நிலையில் அவர் திருட்டை ஒப்புக்கொண்டுள்ளார்.

## சூரியனை விட ஒன்பது மடங்கு பெரிய கருந்துளை கண்டுபிடிப்பு



சூரிய மண்டலம் இருக்கும் பால்வெளி மண்டலத்திற்கு அருகிலுள்ள இன்னொரு மண்டலத்தில் விசித்திரமான கருந்துளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கருந்துளை என்பது ஒளி உள்பட அதன் எல்லைக்குள் செல்லும் எதுவுமே வெளியேறமுடியாத அளவு வலுவான ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள பகுதியாகும்.

பெரும் நட்சத்திரங்கள் இறுதிக்கட்டத்தை அடையும்போது அவை சுப்பர்நோவா எனும் ஒருவகை வெடிப்புக்குள்ளாகின்றன. அப்போது கருந்துளைகள் உருவாகின்றன. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருந்துளை சுப்பர்நோவா வெடிப்புக்குள்ளாகவில்லை என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருந்துளை சூரியனைவிட 9 மடங்கு பெரியது. அது பூமியிலிருந்து சுமார் 160,000 ஒளி ஆண்டுத் தொலைவில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ஓர் ஒளி ஆண்டு என்பது சுமார் 9.5 டிரில்லியன் கிலோமீற்றராகும். கருந்துளையுடன் இணைந்து ஒரு நட்சத்திரமும் வட்டப்பாதையில் வருவதாகக் கூறப்படுகிறது. அதுவும் காலப்போக்கில் இன்னொரு கருந்துளையாக மாறும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# கிழக்கின் குரல்





மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தையொட்டிய கொடியேற்றம் நேற்று முன்தினம் (19) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்றது. ஆலய பிரதம குரு ஆதிசவுந்தரராஜக் குருக்கள் கொடியேற்றுவதையும் பின்பு கொடிக்கம்பத்திற்கு அபிஷேகம் செய்வதையும் கலந்து கொண்ட அடியவர்களையும் காணலாம். (படங்கள்: மட்டக்களப்பு விசேட நிருபர்)

## மேலதிக பஸ் சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளை மேலதிக சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று, கல்முனை நகரங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் மந்த கதியில் இயங்குவதாகவும் பிரயாணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அரச தனியார் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், வைத்தியசாலைகளுக்கு செல்லும் நோயாளர்களும் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்காக செல்லும் பொது மக்கள் ஆகியோர் இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டியில் நாளாந்தம் பிரயாணம் செய்கின்றனர்.

பஸ் சேவைகள் மந்தகதியில் சேவையில் ஈடுபடுவதால் குறித்த நேரத்திற்கு அலுவலகங்களுக்கு செல்லும் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் குறித்த நேரத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றுஅம்பாறை, அக்கரைப்பற்றுகல்முனை, கல்முனை அம்பாறை ஆகிய மார்க்கங்களில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து பஸ் வண்டிகளுக்கு மேலதிகமாகவும் பஸ் சேவையை ஈடுபடுத்துமாறும் பிரயாணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆரையம்பதி – தாழங்குடா ஐ.ஓ.சியில் குழப்பம் விளைவித்தவர் கைது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஆரையம்பதி தாழங்குடா லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த (16) ஆம் திகதி தூரப் பகுதிகளில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்காக அரச திணைக்கள வாகனங்களில் கலன்கள் கொண்டு வரப்பட்டு பெற்றோல் விநியோகப்பட்டபோது குழப்பத்தை ஏற்படுத்தி, அரச சொத்துக்களிற்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த தினத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது தவறுதலான புரிதலினால் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பொதுமக்கள் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், ஒரு சிலரால் அரச சொத்துக்களான சில வாகனங்கள் சேதமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணையின் போதே சந்தேகத்திற்கிடமான காத்தான்குடியை சேர்ந்த 32 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்துள்ளனர்.



நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து தோப்பூர் ரவுண்ட்டபோட் சந்தியில் இளைஞர்கள் கேக் வெட்டி பட்டாசு கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை தெரிவித்த போது,.... (படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

கல்முனை மாநகரில் கழிவகற்றலில் பெரும் சிக்கல்

## மக்களின் ஒத்துழைப்பை கோரும் கல்முனை மாநகரசபை முதல்வர்





வெல்லாவெளி தினகரன் நிருபர்

எரிபொருள் பிரச்சினை காரணமாக ஒரு வாரகாலமாக கல்முனை மாநகரத்தில் திண்மக்கழிவகற்றலை முறையாக செய்ய முடியாமல் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும், குப்பைகளை பொதுமக்கள் வீதிகளில் வைப்பதும், வீசுவதையும் தவிர்த்து இயன்றளவு தங்களின் காணிகளில் புதைக்குமாறு கல்முனை மாநகரசபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.ரக்கீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபை உட்பட்ட பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, நட்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, துரைவந்தியமேடு போன்ற கிராமத்தில் உள்ள பொதுமக்கள் தங்களின் வீடுகளில் சேகரிக்கப்படும் வீட்டுக் கழிவுகளை தங்களின் வீட்டுக்கு முன்னாலும், பொது இடங்களிலும் வைத்துள்ளார்கள். இவ்வாறு வைக்கப்பட்ட கழிவுகளை கல்முனை மாநகரசபை தங்களின் ஆளணியினரைக் கொண்டு வாகனங்களில் முறையாக அகற்றி வந்தார்கள். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை காரணமாக கல்முனை மாநகரசபைக் குட்பட்ட கிராமங்களில் முறையாக கழிவுகளை அகற்ற முடியாமற்போயுள்ளதாக கல்முனை மாநகரசபை முதல்வர் தெரிவித்தார்.

இவ்வாறு எரிபொருள் பிரச்சினை காரணமாக கல்முனை மாநகரசபை நாளாந்தம் திண்மக்கழிவகற்றலை மேற்கொள்ளாமல் பல சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். எனவே பொதுமக்கள் இனிவரும் காலங்களில் வீட்டில் சேகரிக்கப்படும் கழிவுகளை வீதிகளில் வைப்பதை தவிர்த்து தங்களின் காணிகளில் புதைத்து கல்முனை மாநகரசபையின் புனிதத்தை பேணுமாறு கல்முனை மாநகரசபை முதல்வர் கோரிக்கை விடுத்தார்.

## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையில் குடிநீர் வழங்குவதில் சிக்கலா?

காரைதீவு குறூப் நிருபர்



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு இம்முறை காட்டுப்பாதையில் குடிநீர் வழங்குவதில் சிக்கல் நிலை எதிர்நோக்கப்பட்டுள்ளதாக பரவலாக கூறப்படுகிறது.

அம்பாறை அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காட்டுப்பாதை வழியாக செல்லும் அடியார்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டது.

இம் முறை பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பாதயாத்திரையில் பயணிக்க விருக்கின்றனர். இந்நிலையில் குடிநீர் இல்லாத செய்தி இந்துக்கள் மத்தியில் கவலை கொள்ள வைத்திருக்கின்றது.

குறிப்பாக உகந்தை ஆலயத்தில் இருந்து குமுக்கன் வரையான பிரதேசத்தில் பாணமைப்பற்று லாகுகல பிரதேச செயலகமும் குமுக்கன் ஆற்றில் இருந்து யால பிரதேசத்திற்கு திருக்கோயில் சிவ தொண்டர் நிலையமும் யால ஆற்றில் இருந்து கதிர்காமம் வரை மொனராகலை செயலகமும் பொறுப்பாக்கப்பட்டு இருந்தது .

இருந்த பொழுதிலும் சமகால எரிபொருள் பொருளாதார நெருக்கடி காரணமாக வழமைபோல சீராக வழங்குவதில் சிரமம் ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகின்றது.

இதனை செவ்வனே நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

## சீனக்குடா எரிபொருள் நிலையத்தில் மோதல்;

ஒருவர் படுகாயம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை சீனக்குடா எரிபொருள் நிலையத்தில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு (19) 10:30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் திருகோணமலை சங்கம பகுதியைச் சேர்ந்த ஏ.எச். முதித கவிஸ்க (24 வயது) இளைஞர் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக நீண்ட வரிசையில் நின்று டோக்கன் பெற்று நேற்று முன்தினம் பெட்ரோல் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் நின்ற போது அவருக்கு முன்னால் இன்னும் ஒருவர் செல்ல முற்பட்ட வேலை இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாக்குவாதம் கைகலப்பாக மாறியதினால் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞரை தாக்கிய சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தப்பி ஓடி உள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது. குறித்த கைகலப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்.

## அக்கரைப்பற்று வீடொன்றில் ஜன்னல் கண்ணாடிகளுக்கு சேதம் விளைவிப்பு



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று 17ஆம் பிரிவு ஏ.வீ.வீ வீதியில் உள்ள வீடொன்றில் ஜன்னல் கண்ணாடிகள் இனந்தெரியாத நபர்களினால் செவ்வாய்க்கிழமை (19) சேதமாக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த வீட்டில் உள்ளவர்கள் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக வெளியூர் ஒன்றுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தை பார்த்து இனந்தெரியாத நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து ஜன்னல் கண்ணாடிகளை மிக மோசமாக தாக்கியுள்ளனர். இச்சத்தத்தை கேட்ட அயலவர்கள் வந்த போது இந்நபர்கள் தப்பியோடியுள்ளதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும், இவர்களை அடையாளம் காண்பதற்கான ஏற்பாடுகளையும் அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தோப்பூர் கமநல சேவை பிரதேசத்திற்கு யூரியா உரம் வழங்கல்

தோப்பூர் குறூப் நிருபர்



தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு முதல் கட்ட யூரியா உரம் வழங்கும் நிகழ்வு (20) கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நௌசாத் தலைமையில் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது 25,000 கிலோகிராம் யூரியா உரத்தினை 625 ஏக்கர் நெற்செய்கை உரிமையாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் ஏனைய விவசாயிகளுக்கு யூரியா உரம் அடுத்த கட்டம் வழங்கவுள்ளதாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சிறுபோக நெற்செய்கைக்கு உரிய காலத்திற்கு உரத்தினை பெற்றுத் தந்த கமநல உத்தியோகத்தருக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அக்கரைப்பற்று

## ஆதார வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம்


அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



தெஹியத்தக்கண்டிய ஆதார வைத்தியசாலையிலுள்ள வைத்தியரை தாக்கியதற்கு எதிராக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தெஹியத்தக்கண்டிய ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியவர் ஒருவர், அப்பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் வைத்து பெட்ரோல் பெற வந்த காடையர்களினால் தாக்கப்பட்டமைக்கு எதிராகவும், காடையர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அத்தோடு சுகாதார தரப்பினருக்கு எரிபொருள் வழங்கும் தினத்தில் பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை முன்பாக நேற்று (20) ஒன்றிணைந்த சுகாதார சங்கங்களினால் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மலைச்சாரல்



# கேகாலையில் டெங்கு காய்ச்சல் தீவிரம்

## இருவர் உயிரிழப்பு

கேகாலையில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால், இருவர் உயிரிழந்துள்ளதுடன், 1212 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கேகாலை பிரதேச தொற்று நோய் பிரிவின் வைத்திய நிபுணர் சுஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் 11 சுகாதார வைத்திய பிரிவுகளிலும் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்படுவதாகவும் இதில் கேகாலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கேகாலை சுகாதார பிரிவில் 234 பேரும் இரண்டாவதாக மாவனெல்ல சுகாதார பிரிவில் 229 பேரும் மூன்றாவதாக தெஹியோவிட்ட சுகாதாரப் பிரிவில் 159 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

டெங்கு மரணங்கள் இரண்டும் தெஹியோவிட்ட மற்றும் கேகாலை ஆகிய சுகாதார பிரிவுகளில் பதிவாகியுள்ளது என்றார்.

கடந்தாண்டு இதே காலப்பகுதியில் கேகாலை மாவட்டத்தில் 630 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டது. அதே போன்று இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றார்.

எனவே மூன்று நாட்களுக்கு அதிகமாக காயச்சல், உடல் வலி, வாந்தி, கண்ணின் கீழ் பகுதியில் வீங்குதல் போன்றன டெங்கு நோயின் அறிகுறி என தெரிவித்த அவர், இவ்வாறு நோயின் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# நீரில் மூழ்கி குடும்பஸ்தர் பலி

(ஹாலி எல விசேட நிருபர்)

வெல்லவாய புதுறுவகல ஏரியில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

உயிரிழந்தவர் மெதகொட நிகபிட்டிய கிராமத்தைச் சேர்ந்த 52 வயதுடைய எஸ்.பிரேமசிறி என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை என தெரியவந்துள்ளது.

வெல்லவாய புதுறுவகல ஏரியில் மீன்பிடிக்கச் சென்ற போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மறுநாள் (19) காலை மீன்பிடி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் அவரின் சடலம் நீரில் மிதப்பதை கண்டு பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை வெல்லவாய வைத்தியசாலையில் நடைபெற்றது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு வெள்ளவாய மரண விசாரணை அதிகாரி திரு.எச்.எம்.ஜே.ஹேரத் சுமார் 400 மீற்றர் தூரம் படகில் சென்று அவதானித்து சாட்சியங்களை பதிவு செய்த பின்னர் சடலத்தை படகின் உதவியுடன் கரைக்குக் கொண்டு வந்தனர்.

# நீர்நிலைகளுக்கு பெரும் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சிங்கராஜ வனத்துக்கு மிக அண்மித்த வனப்பகுதியில் தனியார் தோட்ட நிலங்களில் காடுகளை துப்பறவு செய்து பயிர்ச்செய்கை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் மனித செயற்பாடுகளால் இறக்குவானை கொடக்கவல பிரதேச மக்களுக்கான குடிநீர் விநியோகத்திலும் வனப்பகுதியில் இயற்கை நீரூற்றுக்கள் மற்றும் சுற்றாடலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

# மரண வீட்டில் தங்க நகைகள் திருட்டு

## ஹாலிஎலயில் சம்பவம்

(ஹாலி எல விசேட நிருபர் )

ஹாலிஎல பிரதேசத்தில் மரண வீடொன்றில் அலுமாரியில் இருந்த தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன.

சந்தேகநபர் மரணவீடொன்றில் கலந்து கொண்டு அங்கு அலுமாரியில் தங்கப்பொருட்களை திருடியுள்ளார். இதனையடுத்து ஹாலிஎல பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் அதற்கு முன்னர் பல்வேறு குற்றங்களை செய்து சிறைத்தண்டனை பெற்றவர் எனவும் பொலிஸார் தெரிவித்தார்.

அண்மையில் ஹாலிஎல அந்துடுவாவல பகுதியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கின் போது வீட்டின் அறையொன்றிலுள்ள அலுமாரியில் இருந்த இரண்டு தங்க மோதிரங்கள் மற்றும் ஒரு ஜோடி காதணிகளை யாரோ ஒருவர் திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் ஹாலிஎல பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, ஹாலிஎல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ருவன் குணதிலக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம். தயானந்த உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். பல சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபரை கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவரிடமிருந்து மரண வீட்டில் காணாமல் போன தங்கநகைகள் மீட்கப்பட்டுள்ளன.

# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கந்தப்பளை நகரில் வாகன நெரிசல்

கந்தப்பளை நகரில் இயங்கும் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அதிகமான வாகனங்கள் எரிபொருள் நிரப்ப வருகை தருவதால் அப்பிரதேசத்தில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக இராகலை பிரதேசத்திலிருந்து நுவரெலியாவுக்கும், நுவரெலியாவிலிருந்து இராகலை பிரதேசத்திற்கும் செல்லும் வாகனசாரதிகளுக்கு போக்குவரத்து அசௌகரியம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி சாரதிகளுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் இடையில் அவ்வப்போது முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கந்தப்பளை நகரம் சிறிய நகரம் என்றாலும் இருவழி போக்குவரத்து செய்யக்கூடிய பாதை வசதிகள் காணப்படுகின்றன. எனினும் எரிபொருள் நிலையத்தில் காணப்படும் வாகனங்களினால் ஒரு வழி போக்குவரத்து முற்றாக தடைப்படும் நிலை உருவாகி வாகன நெரிசல் ஏற்படும்.



இதனால் அவசர பயணங்களை மேற்கொள்வோர் பாரிய அசௌகரிகங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதுடன் சாரதிகளுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இராகலை நகரில் இயங்கும் சிபெட்கோ எரிபொருள் நிலையமும் கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளன.

அதேபோல உடப்புஸ்ஸலாவை நகரிலும் முறையாக எரிபொருள் கிடைப்பதில்லை மேலும் வலப்பனை நகரிலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்நிலையில் கந்தப்பளை நகரிலுள்ள ஐ.ஒ.சி நிரப்பு நிலையத்திற்கு மாத்திரமே இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாக எரிபொருள் கிடைக்கின்ற போதும் உடப்புஸ்ஸலாவை, இராகலை,ஹைபொரஸ்ட் மற்றும் வலப்பனை பகுதியில் உள்ளவர்கள் கந்தப்பளை நகரை நோக்கி எரிபொருள் பெற்றுக்கொள்ள வருகின்றனர்.

இதன் காரணமாகவே கந்தப்பளை நகரில் வாகன நெரிசல் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இடவசதி போதாமையால் கந்தப்பளை நகரில் வந்து குவியும் வாகனங்களால் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. எனவே, உடனடியாக தீர்வை எடுக்க வேண்டும் என கந்தப்பளை நகர வர்த்தகர்கள்,சாரதிகள் மற்றும் நிரப்பு நிலைய முகாமையாளர் ஆசைத்தம்பி ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு இராகலை,உடப்புஸ்ஸலாவை மற்றும் வலப்பனை நகரங்களில் இயங்கும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆ.ரமேஸ்

# ஜனாதிபதி ரணில் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும்

## ஐ.தே.க அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்து

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு விரைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்வை வழங்கி நாட்டை மீட்டெடுப்பார் என்பதுடன், மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை நெருக்கடிகள் இன்றி கொண்டுசெல்லவும் தற்போதைய வாழ்க்கை செலவை குறைக்கவும் ஜனாதிபதி விரைவாக நடவடிக்கை எடுப்பார் எனவும் அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்ய பாராளுமன்றத்தில் வாக்களித்த அனைத்து எம்.பிகளுக்கு நன்றியை தெரிவிப்பதுடன், நாட்டின் எதிர்காலம் மற்றும் தொலைநோக்கு கொள்கையை கொண்டுள்ள ஒரு சரியான ஜனாதிபதி பல தசாப்தங்களின் பின்னர் தற்போதுதான் உருவாகியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு மூன்று இலட்சம் வரையான வாக்குகளை மாத்திரம் வழங்கி மக்கள் வரலாற்று பிழையை செய்திருந்தனர். ஆனால், மீண்டும் அவர் அரியணை ஏறியுள்ளார். மக்கள் இவர் மீது முழுமையான நம்பிக்கையை கொள்ளுமாறு கோருகிறேன்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை வழங்கக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. அவரது அரசியல் அனுபவம் மற்றும் பொருளாதாரத்தை கையாளும் அனுபவங்களின் ஊடாக மாத்திரமே நாட்டை வழமைக்கு கொண்டுவர முடியும். மீண்டும் இலங்கையை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் ஒரு நாடாக ஜனாதிபதி ரணில் மாற்றியமைப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.



# 1040 லீற்றர் டீசலுடன் இளைஞன் கைது; பதுளையில் சம்பவம்

லுனுகலை நிருபர்

பதுளையில் இலங்கை போக்குவரத்து சபை எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து 1040 லீட்டர் டீசலை எடுத்துச் சென்ற நபர் ஒருவர் நுகர்வோர் அதிகாரசபையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

படல்கும்பர பகுதியைச் சேர்ந்த இந்த நபர் ஒருவர் லொறி ஒன்றில் அத்தியாவசிய சேவைகளெனக் கூறி 1040 லீற்றர் டீசலை பெற்றுக் கொண்டு வெளியே வரும் போது நுகர்வோர் அதிகாரசபையினரால் சோதனைக்கு உட்படுத்திய வேளை போலியான முறையில் டீசல் பெற்றுக்கொண்டுள்ளமை இதன் போது கண்டறியப்பட்டுள்ளது. பட்ல்கும்பர பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்து அவரிடமிருந்த 1040 லீற்றர் டீசலும் கைப்பற்றப்பட்டது. அத்தோடு இலங்கை போக்குவரத்து சபையில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திலும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுகர்வோர் அதிகாரசபையினர் கைது செய்யப்பட்ட 27 வயதுடைய நபருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கூரைத் தகடுகள் மாயம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட – சாமிமலை டீசைட் தோட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் தனி வீட்டுத்திட்டத்தின் கூரைத் தகடுகள் திருடப்பட்டுள்ளதாக மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வழியே தொழிலுக்கு சென்ற தொழிலாளர்கள், வீட்டின் கூரைகள் கழற்றப்பட்டுள்ளதைக் கண்டு, தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து தோட்ட நிர்வாகத்தால் மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தனிவீட்டுத் திட்டம் முழுமையாக நிறைவடையாமல் கைவிடப்பட்டுள்ளமையால் பொருட்களும் திருடப்பட்டு வருவதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.




தேசிய சமாதான பேரவையினால், பதுளை மாவட்ட அரச செயலக நிர்வாக உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கான 'பன்மைத்துவம்' தொடர்பான முழுதின செயலமர்வு, பதுளை ரிவர் சைட் கிராண்ட் விடுதியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வு பிரதான இணைப்பாளர் இராமச்சந்திரன் ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

படம் பதுளை தினகரன் விசேட நிருபர்



பாராளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து கம்பளை நகரில் பட்டாசுகொழுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். கம்பளை நகர சபை தவிசாளர் சமந்த அருணகுமார தலைமையில் மக்களும் ஒன்றிணைந்து பட்டாசு கொழுத்தி சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

படம் கம்பளை நிருபர்

# எரிபொருள் பற்றாக்குறை; கலேவெல பிரதேச வைத்தியசாலைக்குப் பூட்டு

தம்புள்ள தினகரன் நிருபர்

கலேவெல நகரிலுள்ள ஒரேயொரு அரச வைத்தியசாலையான கலேவெல பிரதேச வைத்தியசாலை, எரிபொருள் பிரச்சினை காரணமாக மூடப்படுவதாக மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த மூன்று வாரகாலமாக கலேவெல பிரதேச வைத்தியசாலை ஊழியர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்படாமையினால் அவர்களால் கடமைக்கு சமுகமளிக்க முடியாதிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இதனால் வைத்தியசாலையை மூடிவிட நேர்ந்திருப்பதாக மாவட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.





8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று (20) பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது போட்டியிட்ட பதில் ஜனாதிபதியும், பிரதமருமான ரணில் விக்ரமசிங்க, டளஸ் அழகப்பெரும எம்.பி மற்றும் அநுரகுமார திஸநாயக எம்.பி ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொண்ட போது.....



ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நேற்று (20) பாராளுமன்றத்தை விட்டு வெளியேறும் போது தனது வாகனத்திலிருந்து இறங்கி பாராளுமன்ற வளாகத்தின் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினரையும் பொலிஸாரையும் நேரில் சந்தித்து, முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் நன்றி தெரிவித்தார். மூன்று இடங்களில் வாகனத்திலிருந்து இறங்கிய ஜனாதிபதி படையினருக்கு நன்றி தெரிவித்தார். நேற்று ஜனாதிபதித் தேர்தலை யொட்டி, பாராளுமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.


## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை

### பொலன்னறுவ

## கேள்வி அறிவித்தல்

பொலன்னறுவ பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட எஞ்சிய பிளாஸ்டிக் பாகங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் கழற்றி அகற்றப்பட்ட கீழ்க்காணும் உபகரணங்களை விற்பனை செய்வதற்காக பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | கழற்றி அகற்றப்பட்ட கட்டிடப் பாகங்கள் | 2,000.00 |
| 2 | கட்டிடங்களிலிருந்து அகற்றப்பட்ட ஷீட்கள் | 10,000.00 |
| 3 | கழிக்கப்பட்ட இரும்பு மற்றும் அவ்வாறான துணைப் பாகங்கள் | 10,000.00 |
| 4 | பிளாஸ்டிக் பாகங்கள் மற்றும் அவ்வாறான துணைப்பாகங்கள் | 15,000.00 |
| 5 | கண்ணாடி போத்தல் (குப்பி) மற்றும் அகற்றப்பட்ட தாள், காட்போட் | 4,000.00 |
| 6 | டயர் | 30,000.00 |
| 7 | பெற்றரி | 2,000.00 |
| 8 | பல்மருத்துவ கதிரைகள் | 25,000.00 |

02. மீளளிக்கப்படாத ரூ. 2000/- கட்டணத்தைச் செலுத்தி 2022.07.22 முதல் 2022.08.09 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பொலன்னறுவ பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்யலாம். அவ் வேளையில் பொருட்களைப் பரீட்சிப்பதற்காக அனுமதிப்பத்திரங்களும் விநியோகிக்கப்படும். மீளளிக்கப்படும் வைப்பையும் பிரதேச சுகாதார சேவைப் பணிமனைக்கு செலுத்த முடியும் அத்துடன் அவ் வைப்பை கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கு முன் காசாக மட்டும் செலுத்துதல் வேண்டும்.

03. விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பொருட்களும் மலேரியா களஞ்சியம், ச.தோ.ச. சந்தி, ஹிங்குரக்கொட (பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்குச் சொந்தமான) முகவரியில் வைக்கப்பட்டுள்ளதுடன், கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்யும் வேளையில் விநியோகிக்கப்படும் அனுமதிப் பத்திரத்தின் மூலம் இருவருக்கு சென்று பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. 'பொலன்னறுவ பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக்கோரல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2022.08.10ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது தலைவர், பிரதேச பெறுகைக்குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, வைத்தியசாலை சந்தி, பொலன்னறுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் 2022.08.10ம் திகதி மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன், அவ் வேளையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ் வேளைக்காக விலைமனுக்களை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாக கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை**
**பொலன்னறுவ.**

# புதிய ஜனாதிபதியின் தெரிவு ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி அரசியல் பேதங்களை மறந்து சகலரும் ஒன்றுபட இதுவே சந்தர்ப்பம்

நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றம் தெரிந்திருப்பது ஜனநாயகத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியென தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத்சாலி தெரிவித்துள்ளார். புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வாழ்த்தி,வெளியிட்டுள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல பாதைகளை கடந்து வந்தவர். அரசியலில் எத்தனை சவால்களை எதிர்கொள்ள நேர்ந்த போதும், ஒருநாளும் அவர் ஜனநாயகத்தை விட்டுக்கொடுத்ததில்லை. முக்கியமான காலகட்டத்தில் பல தியாகங்கள் செய்து நாட்டையும், மக்களையும் பாதுகாத்த பெருமை அவருக்குண்டு. மட்டுமல்ல நெருக்கடியான நேரங்களில்கூட துணிந்து நின்று பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட அவரது முன்னுதாரணம், அரசியல் முதிர்ச்சியையே காட்டுகிறது.



வாதத்திறமையும், வாக்குறுதி மீறாத நேர்மையும்தான் அவரை இந்தளவு உயர்த்தியிருக்கிறது.சர்வதேசத்தில் அவருக்குள்ள செல்வாக்கினால் நமது நாட்டு நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வியூகங்களை வகுப்பார் என்ற நம்பிக்கை எனக்குமட்டுமல்ல, பாராளுமன்றத்துக்கும் உள்ளது. இந்த நம்பிக்கைதான் அவரை இன்றைய வாக்கெடுப்பில் வெற்றியீட்ட வைத்துள்ளது.

வென்றகையோடு சகல கட்சிகளையும் ஒத்துழைக்குமாறு புதிய ஜனாதிபதி அழைத்திருப்பது ஜனநாயகவாதிக்குள்ள பண்பையே எடுத்துக் காட்டுகிறது.

எனவே, இனியாவது அரசியல் பேதங்களை மறந்து, நமது நாட்டு நெருக்கடியை தீர்க்க சகலரும் புதிய ஜனாதிபதியுடன் கைகோர்க்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# வீட்டிலிருந்த பொருட்களை எரித்துவிட்டு தற்கொலை

**(அநுராதபுரம் தினகரன் நிருபர்)**

அநுராதபுரம் கல்கடவள பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் சிலவற்றினை எரித்து நாசமாக்கிவிட்டு, தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர். கல்கடவள மஹிலாமாவத்த பகுதி வீடொன்றில் இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவத்தில் உயிரிழந்தவர் 47 வயதுடைய அநுராதபுரம் கல்கடவள பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஓய்வு பெற்ற கடற்படை வீரர் என்பதும் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. சம்பவதினத்தன்று இரவு கணவனுக்கும் மனைவிக்குமிடையில் குடும்பப் பிரச்சினை ஏற்பட்டது.

இதன்போது ஆத்திரத்தை கட்டுப்படுத்த முடியாமல் கணவன், தற்கொலை செய்து கொண்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை கடற்படை

## விலைமனுக்கோரல் (IFB)

**இலங்கை கடற்படையின் கப்பல்கள்/ முகாம்களுக்கான பச்சை மற்றும் உலர் உணவுப்பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான கொள்முதல் - 2023**

**ஒப்பந்த இலக்கம்: *No SLN/VICT/ 01/2023***

1. 2023 ஆம் ஆண்டிற்கான முப்படைகளின் பச்சை/உலர் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள கொள்முதல் குழுவின் (SCAPC) தலைவரினால் இலங்கை கடற்படைக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உணவு கீழ் காணும் நிலையங்கள் / முகாம்களுக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பிட்ட விலைமனுக்கள் பொருத்தமான மற்றும் தகுதிவாய்ந்த வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சில்லரை விற்பனைாளர்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது. விநியோக காலம் **2023 ஜனவரி 01** தொடக்கம் **2023 டிசம்பர் 31** வரையாகும்.

1.1 **பச்சை மற்றும் உலர் உணவு பொருட்கள்**

**1.1.1** **பச்சை உணவுப்பொருட்கள்**

| விநியோக இடம்/ கடற்படை முகாம்கள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| **(அ) வகை - கடற்படை முகாம்ங்கள்** | | |
| 1.1.1.1. கொழும்பு தெற்கு | 1.1.1.2. கொழும்பு வடக்கு | 1. சமைத்த உள்ளுர் காலை உணவு மற்றும் இரவு உணவு |
| 1.1.1.3. கண்டி | 1.1.1.4. திருகோணமலை | 2. பால் பொருட்கள் / ஐஸ்கிரீம் |
| 1.1.1.5. முல்லைத்தீவு | 1.1.1.6. வாகரை | 3. காய்கறிகள் மற்றும் பழங்கள் |
| 1.1.1.7. கின்னியா | 1.1.1.8. திரியாய | 4. உறைந்த உணவு |
| 1.1.1.9. காங்கேசன்துறை | 1.1.1.10. ஊர்காவற்துறை | 5. இறைச்சிகள் |
| 1.1.1.11. காலி | 1.1.1.12 தங்கல்லை | 6. வெதுப்பக உணவு பொருட்கள் |
| 1.1.1.13 பூனேவ | 1.1.1.14 மன்னார் | 7. புதிய மீன்கள் |
| 1.1.1.15. புத்தளம் | 1.1.1.16. முல்லிகுளம் | 8. கோழி இறைச்சி |
| 1.1.1.17. மஹோ | 1.1.1.18. பானம | 9. கோழி முட்டை |
| | | 10. மட்டை இல்லாத தேங்காய் |

**1.1.2** உலர் உணவு வகைகள்

| விநியோக இடம்/ கடற்படை முகாம்கள் | | உணவு வகைகள் | |
|---|---|---|---|
| **(ஆ) வகை - கடற்படை முகாம்ங்கள்** | | | |
| 1.1.2.1. கொழும்பு தெற்கு | 1.1.2.2. கொழும்பு வடக்கு | 1. பால்மா வகைகள் | 2. போத்தல் குடிநீர் |
| 1.1.2.3. கண்டி | 1.1.2.4. திருகோணமலை | 3. உலர்ந்த கருவாடு | 4. சமையல் எண்ணெய் |
| 1.1.2.5. முல்லைத்தீவு | 1.1.2.6. வாகரை | 5. தானிய வகைகள் | 6. பேக்கரி உற்பத்தி மூலப்பொருட்கள் |
| 1.1.2.7. காங்கேசன்துறை | 1.1.2.8. காலி | 7. ஊக்க உணவுகள் | 8. அரைத்த மசாலா |
| 1.1.2.9. தங்கல்லை | 1.1.2.10. பூனேவ | 9. மசாலாக்கள் | 10. சர்க்கரை |
| 1.1.2.11. மன்னார் | 1.1.2.12. புத்தளம் | 11.பொதி செய்யப்பட்ட உணவுகள் | 12. பிஸ்கட் |
| 1.1.2.13. முல்லிகுளம் | 1.1.2.14. பானம | 13. சொக்லட் | 14. பாஸ்தா |
| | | 15. கோர்டியல்/ ஜாம்/ சட்னி/ சோஸ் வகைகள் | 16. அரிசி |
| | | 17. பிற உணவு பொருட்கள் | |

1.2 ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உணவுப்பொருட்களை விநியோகித்தல் 1980 ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இடம்பெறவேண்டும்.

1.3 **விலைமனுவானது ஒவ்வொரு நிலையம்/ முகாம் அடிப்படையிலும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையிலும் சமர்பித்தல் வேண்டும்.**

1.3.1 ஒரு நிலையம் / முகாம் அடிப்படையில் மற்றும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையில் வெவ்வேராக விலைமனு வழங்குதல் வேண்டும். குறிப்பிட்ட விலையில் ஒரு நிலையத்தின், முகாமின் குறித்த வகைப்படுத்தல் விலை மனுவிற்காக விலைமனுதாரர் குறித்த வகைப்படுத்தலில் உள்ள அனைத்து உணவு பொருட்களுக்கும் விலைமனு வழங்க விலைமனுதாரர் தவரும் பட்சத்தில் அத்தகை விலைமனுவானது பதிலளிக்காததாக கருதப்படும்.

1.3.2 ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை இடலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1. "அ"-பச்சை உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 180 மனுக்கள் இருப்பதுடன், (18 இடங்கள் x 10 உணவு வகைகள் = 180 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.2. "ஆ" - உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 210 மனுக்கள் இருப்பதுடன், (14 இடங்கள் x 17 உணவு வகைகள் = 238 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக இடங்கள்/ முகாம்கள்/கப்பல்கள் மற்றும் துணை அலகுகளுக்கு உணவுகளை கொண்டு செல்வதற்கான பொறுப்பு அவர்களையே சாறும். தனிப்பட்ட விநியோக இடங்கள்/முகாம்கள்/கப்பல்கள் மற்றும் சரக்குகள் பற்றிய விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 இன் 3.2 இற்கு அமைவாக தேசிய மனுக்கோரல் போட்டி முறைமைக்கு அமைவாக செயற்படுத்தப்படும். வெளிநாட்டு மனுதாரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. மனுக்கோரலுக்கான தகுதியாக மனுதாரர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்குள் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்ய தகுதியான மற்றும் தகைமைகளை உடைய இலங்கையின் வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சில்லரை விற்பனை நிலையங்கள், வரையறுக்கப்பட்ட கம்பனிகள், அல்லது ஏனைய உள்நாட்டு வியாபார பதிவை கொண்டிருத்தல் வேண்டும். மனுதாரரின் பெயர் கறுப்பு பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. தேவைகளை நிறுவிய அனைத்து ஆவணங்களும் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். தகுதிக்கு கிந்தை கட்டத்தில், மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையில் விவரிக்கப்பட்டுள்ள படி, எந்தவொரு குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமாக பதிலளிக்கக்கூடிய மனுதாரருக்கு வழங்கப்படும். அதிகபட்ச ஒப்பந்த தொகைக்கு எதிராக இந்த வழங்களுக்கு தகுதிபெற குறைவாக அளவிடப்படுகின்றன. பின்வரும் குறைந்தபட்ச அளவுகோல்கள பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

5.1 உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருவாய் ஏதேனும் 2 நிதியாண்டுகளுக்கு முந்தை 3 ஆண்டுகளுக்குள் **ரூ.10 மில்லியன்.** அந்தந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.2 திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச அளவு (நிதி அறிக்கைகள் 2021/2022 அடிப்படையில்) **ரூ.5 மில்லியன்.** (காசு மீதி, வங்கி மீதி, குறுகிய கால முதலீடுகள் மற்றும் பெறுவகைள்) நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், 2021/2022 நிதியாண்டிற்கான மனுதாரர் கணக்காய்வு செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தால், மனுதாரர் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை **2022.09.15** அன்று அல்லது அதற்கு முன் தகுதி சரிபார்ப்பு கட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

5.3 இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த மனுக்கோரலுக்காக மட்டும் வழங்கும் குறைந்தபட்ச கடன் வரம்பு **ரூ.05 மில்லியனாக** இருக்க வேண்டும்.

5.4 **பச்சை உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள்/உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.5 **உலர் உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள்/உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.6 **கடந்த 03 ஆண்டுகளில் 02 ஆண்டுகள்** உணவு மூலப்பொருள் விநியோகத்தில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

6. மனு ஆவணங்கள் வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் மனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்ப திகதி | - 2022.07.21 |
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - 2022.08.22 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | - 2022.08.23 மு.ப.9.00 மணி வரை |
| மனுக்கள் திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் : (அத்மிரால் சோமதிலக திசாநாயக்க கேட்போர் கூடம், இலங்கை கடற்படை தலைமையகம்) | -2022.08.23 மு.ப.9.00 மணிக்கு |

7. மனுக்கள் தொடர்பான கூட்டம் **2022.08.03 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே எனும் முகவரியில் இடம்பெறும்.

8. கீழ் பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மனுதாரரின் எழுத்துமூல வேண்டுகோளுக்கு இணங்க பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீறுடை) மூலம் மனுதாரருக்கு மீள வழங்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். மீள வழங்கப்படாத கட்டணம் நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட சுற்றறிக்கை **2016 ஜூன் 17 ஆம் திகதி** 06/2016 இன் படி மேற்கொள்ளப்படும். (ஒவ்வொரு மனுக்களுக்கும் பொருத்தமான மீள வழங்கப்படாத கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் கீழே பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீறுடை), இலங்கை கடற்படை எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.)

9. மனுதாரர் மனு சமர்ப்பிப்பதற்காக மனு ஆவண கோப்பினை மட்டுமே பயண்படுத்த வேண்டும். அனைத்து முத்திரையிடப்பட்ட மனுக்களும் பிரதிகளுடன் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பவேண்டும் அல்லது 16 ஆம் பந்தியில் இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியினுள் மேலே உருப்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் இட வேண்டும்.

10. மனுக்கள் திறக்க நியமிக்கப்பட்ட நேரத்தில் மனுக்கள் திறக்கப்படும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை திறப்பதற்காக மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ளமுடியும்.

11. முன்வைக்கப்படும் மனுக்களின் செல்லுபடிகாலம் **2023 மார்ச் மாதம் 31** ஆம் திகதி வரையாகும்.

12. மனுக்களுடன் **2023 ஏப்ரல் மாதம் 30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி பிணையையும் **செயலாளர் பாதுகாப்பு அமைச்சு** எனும் பெயருக்கு முன்வைக்கவேண்டும். அந்த காப்புறுதிப்பிணைகள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் அற்ற மீள்ளளிக்கப்படாத பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய காப்புறுதிப்பிணையின் முதல் பிரதியுடன் வழங்க வேண்டும். (குறித்த வங்கியின் உறுதிப்படுத்தப்பட்ட இலட்சினை பொறிக்கப்பட்ட) மனு காப்புறுதிப்பிணையின் பெறுமதி கொள்முதல் செய்யும் வழிகாட்டல்கள் 2006 ஆம் ஆண்டின் படி மனு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. மனுதாரரினால் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றே தேவைப்படின் உற்பத்தி அனுமதி சான்றிதழையும் முன்வைக்க வேண்டும்.

14. அனைத்து மனுதாரர் குறிப்பிட்ட பொருட்களுக்கான மாதிரிகளை ஏல ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மாதிரியை சமர்ப்பிக்க மனுதாரர் தவறினால், தொடர்புடைய மனுக்கள் மேலதிக மதிப்பீட்டிற்கு கருதப்படாது, மேலும் பதிலளிக்காத மனுக்களாக நிராகரிக்கப்படும்.

15. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய மனுதாரர்கள் மேலதிக விபரங்களை இலங்கை **கடற்படையின் பணிப்பாளர்** (உணவு மற்றும் சீறுடை) காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை இலவசமாக 16ஆம் உருப்படியில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் **2022.07.21** ஆம் திததியில் தொடக்கம் **2022.08.22** வரை **கிழமை நாட்களில் மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரை பரீட்சித்துக்கொள்ளமுடியும்.

16. மேல் குறிப்பிடப்பட்ட விலாசம்

| | | |
|---|---|---|
| கவனத்திற்கு | : | பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீறுடை) |
| விலாசம் | : | கடற்படை தளபதி<br>கடற்படை தலைமையகம்<br>த.பெ.இல. 593<br>கொழும்பு 01. |
| தொலைபேசி | : | 0117190000, 0117192351 (நீட்டிப்பு 12351) |
| தொலைநகல் | : | 0112424577, 011 - 7192380 |
| **மின்னஞ்சல்** | : | **nhqdnvc@navy.lk** |

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு
(முப்படைகளுக்கான மூல மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2023)
பாதுகாப்பு அமைச்சு

# கால்நடைகள் சுதந்திரமாக திரிவதால் பாதசாரிகள், பொதுமக்கள் கடும் அவதி



புத்தளம் நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில், கால்நடைகள் சுதந்திரமாக சுற்றித்திரிவதால் பாதசாரிகள் மற்றும் பிரயாணிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கால்நடைகளை, கொட்டகை உரிமையாளர்கள் விடுவிப்பதால்தான், இவை வீதிகளில் சுதந்திரமாக உலவுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால், பழைய மன்னார் பிரதான வீதியில் எழுவான்குளத்திலிருந்து புத்தளம் வரையில், கால்நடைகள் இரவு பகலாக பல்வேறு இடங்களில் நடமாடுகின்றன.

இதனால், முச்சக்கரவண்டி சாரதிகள், மோட்டார் சைக்கிள் சாரதிகள், பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகன சாரதிகள் அடிக்கடி விபத்துக்களில் சிக்குவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த சாலையில் தினமும் சுமார் பத்தாயிரம் வாகனங்கள் செல்கின்றன. இவ்வாறு, சுதந்திரமாக திரியும் கால்நடைகள் இரவு வேளைகளில் உறங்குவதாலேயே விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

இவ்விடயத்தில், புத்தளம் பிரதேசசபையும் வனாத்தவில்லு பிரதேச சபையும் இணைந்து, மாட்டு கொட்டகை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## போட்டி நிகழ்ச்சியில் வென்றோருக்கு பரிசுகள்

புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் மன்னார் வீதி தாருஸ்ஸலாம் மஸ்ஜிதின், தாருஸ்ஸலாம் முஸ்லிம் மஜ்லிஸ் நடாத்திய போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. அமைப்பின் பொறுப்பாளர் சவ்வாப் ரிபாயிஸ் தலைமையில் புத்தளம் வெஸ்டர்ன் சோல்டன் வீதியில் அமைந்துள்ள ஆர். எஸ். மண்டபத்தில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் இயங்கும் நூலகத்தை பயன்படுத்தி, மாணவர்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட வினா விடை போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கே இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

## ஜம்இய்யதுல் உலமா சபை குழுவினர் காலிக்கு விஜயம்

(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)

சுகயீனமுற்று வீட்டில் ஓய்வு எடுத்து வரும் காலிமாவட்ட ஜம்மியதுல் உலமா சபை தலைவரும், காலி, நாவின்ன அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான மூத்த கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் உஸ்தாத் அல்ஹாஜ் எம்.இஸட் முஹம்மது ஸுஹுர்(பாரி), ஆலிம் அவர்களை சுகம் விசாரிப்பதற்காக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாசபை நிறைவேற்றுக்குழு அண்மையில் அன்னாரின் காலி இல்லத்திற்கு சென்றிருந்தது. ஜம்மியாவின் தலைவர் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ ரிஸ்வி (முப்தி), உப தலைவர்களான மௌலவி புர்ஹான் (பஹ்ஜி), மௌலவி உஸ்தாத் அல்ஹாஜ் எம்.எல்.எம் ரிலா (ஹஸனி,) மௌலவி அப்துர் ரஹ்மான் (ரவ்ழி) உட்பட பல நிறைவேற்று குழு உறுப்பினர்களும் இதன்போது சமுகமளித்திருந்தனர்.

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை விமானப்படை

## விலைமனுக்கோரல் (IFB)

### இலங்கை விமானப்படையின் கப்பல்கள்/ முகாம்களுக்கான பச்சை/ உலர் உணவுப் பொருட்கள் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான கொள்முதல் -- 2023

### ஒப்பந்த இலக்கம்: *SLAF/RA/TB/2023*

1. இலங்கை விமானப்படை பச்சை/உலர் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள கொள்முதல் குழுவின் தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு கீழ் காணும் நிலையங்கள் / முகாம்களுக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பிட்ட விலைமனுக்கள் பொருத்தமான மற்றும் தகுதிவாய்ந்த வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது. விநியோக காலம் **2023 ஜனவரி 01** தொடக்கம் **2023 டிசம்பர் 31** வரையாகும்.

1.1 **விநியோக இடம் மற்றும் தொடர்புடைய பிரிவுகள்**

1.1.1 **பச்சை உணவுப்பொருட்கள்**

| விமானப்படை பயிற்சி கூடங்கள் / தளங்கள் / நிலையங்கள் / துணை பிரிவுகள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| 1.1.1.1. அம்பாறை | 1.1.1.14. கோக்கல | **1.1.1. மூல உணவுப்பொருட்கள் (பிரிவு A)** |
| 1.1.1.2. அனுராதபுரம் | 1.1.1.15. மொரவெவ | 1. காய்கறிகள், பழங்கள், தேங்காய் மற்றும் கோழி முட்டை |
| 1.1.1.3. மட்டக்களப்பு | 1.1.1.16. மீரிகம | 2. புதிய மீன்கள் |
| 1.1.1.4. BIA- கட்டுநாயக்க | 1.1.1.17. முல்லைத்தீவு | 3. இறைச்சி |
| 1.1.1.5. சைனா பே | 1.1.1.18. பலாலி | 4. கோழி இறைச்சி (சுத்தப்படுத்திய) |
| 1.1.1.6. கொழும்பு | 1.1.1.19. பாலாவி - புத்தளம் | 5. வெதுப்பக உணவு பொருட்கள் |
| 1.1.1.7. CTS தியத்தலாவ | 1.1.1.20. பிதுருதலாகல | 6. தேசிய காலை உணவு வகைகள் |
| 1.1.1.8. திகன துணை பிரிவு | 1.1.1.21. RTS வன்னி | |
| 1.1.1.9. TTS ஏக்கல | 1.1.1.22. இரத்மலான | |
| 1.1.1.10. ஹிங்குரக்கொட | 1.1.1.23. சீகிரியா | |
| 1.1.1.11. இரனமடு | 1.1.1.24. வவுனியா | |
| 1.1.1.12. கட்டுகுருந்த | 1.1.1.25. வீரவில | |
| 1.1.1.13. கட்டுநாயக்க | | |

**1.1.2** உலர் உணவு வகைகள்

| விமானப்படை பயிற்சி கூடங்கள் / தளங்கள் / நிலையங்கள் / துணை பிரிவுகள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| 1.1.1.1. அம்பாறை | 1.1.1.14. கோகால | **1.1.2.** உலர் உணவு வகைகள் **(பிரிவு B)** |
| 1.1.1.2. அனுராதபுரம் | 1.1.1.15. மொரவெவ | 1. அரிசி |
| 1.1.1.3. மட்டக்களப்பு | 1.1.1.16. மிரிகம | 2. உலர்ந்த ரேஷன் பொருட்கள் |
| 1.1.1.4. BIA- கட்டுநாயக்க | 1.1.1.17. முல்லைத்தீவு | 3. யோர்கட் |
| 1.1.1.5. சைனா பே | 1.1.1.18. பலாலி | 4. பால்மா |
| 1.1.1.6. கொழும்பு | 1.1.1.19. பாலாவி - புத்தளம் | 5. மசாலா பொருட்கள் |
| 1.1.1.7. CTS தியத்தலாவ | 1.1.1.20. பிதுருதாலகல | 6. தேயிலை |
| 1.1.1.8. திகன துணை பிரிவு | 1.1.1.21. RTS வன்னி | |
| 1.1.1.9. TTS ஏக்கல | 1.1.1.22. இரத்மலான | |
| 1.1.1.10. ஹிங்குருகொட | 1.1.1.23. சீகிரியா | |
| 1.1.1.11. இரனமடு | 1.1.1.24. வவுனியா | |
| 1.1.1.12. கட்டுகுருந்த | 1.1.1.25. வீரவில் | |
| 1.1.1.13. கட்டுநாயக்க | | |

1.2 ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உணவுப்பொருட்களை விநியோகித்தல் 1980 ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இடம்பெறவேண்டும்.

**1.3 விலைமனுவானது ஒவ்வொரு நிலையம் / முகாம் அடிப்படையிலும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையிலும் சமர்பித்தல் வேண்டும்.**

1.3.1 ஒரு நிலையம் / முகாம் அடிப்படையில் மற்றும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையில் வெவ்வேராக விலைமனு வழங்குதல் வேண்டும். குறிப்பிட்ட விலையில் ஒரு நிலையத்தின், முகாமின் குறித்த வகைப்படுத்தல் விலை மனுவிற்காக விலைமனுதாரர் குறித்த வகைப்படுத்தலில் உள்ள அனைத்து உணவு பொருட்களுக்கும் விலைமனு வழங்க விலைமனுதாரர் தவரும் பட்சத்தில் அத்தகை விலைமனுவானது பதிலளிக்காததாக கருதப்படும்.

1.3.2 ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை இடலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1. "அ"- பச்சை உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 131 மனுக்கள் இருப்பதுடன், (25 இடங்கள் x 5) + (6 இடங்கள் x 1) உணவு வகைகள் = 131 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.2 ."ஆ"- உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 107 மனுக்கள் இருப்பதுடன், (25 இடங்கள் x 4) (7 இடங்கள் x 1) உணவு வகைகள் = 107 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக இடங்கள் / முகாம்கள், நிலையங்கள் மற்றும் அலகுகளுக்கு உணவுகளை கொண்டு செல்வதற்கான பொறுப்பு அவர்களையே சாறும். தனிப்பட்ட விநியோக இடங்கள்/முகாம்கள் மற்றும் அலகுகளுக்கு பற்றிய விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 இன் 3.2 இற்கு அமைவாக தேசிய மனுக்கோரல் போட்டி முறைமைக்கு அமைவாக செயற்படுத்தப்படும். வெளிநாட்டு மனுதாரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. மனுக்கோரலுக்கான தகுதியாக மனுதாரர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்குள் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்ய தகுதியான மற்றும் தகைமைகளை உடைய இலங்கையின் வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சில்லரை விற்பனை நிலையங்கள், வரையறுக்கப்பட்ட கம்பனிகள், அல்லது ஏனைய உள்நாட்டு வியாபார பதிவை கொண்டிருத்தல் வேண்டும். மனுதாரரின் பெயர் கறுப்பு பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. தேவைகளை நிறுவிய அனைத்து ஆவணங்களும் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். தகுதிக்கு முந்தைய கட்டத்தில், மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையில் விவரிக்கப்பட்டுள்ள படி, எந்தவொரு குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமாக பதிலளிக்கக்கூடிய மனுதாரருக்கு வழங்கப்படும். அதிகபட்ச ஒப்பந்த தொகைக்கு எதிராக இந்த வழங்களுக்கு தகுதிபெற குறைவாக அளவிடப்படுகின்றன. பின்வரும் குறைந்தபட்ச அளவுகோல்கள பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

